KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V2 No: 5 31.1.1935.

SL
m211,N28kN
N35.8.5
199203

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ ஜனவரி ௴ 31 ௳ [No. 5

பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 65 |
| 2. | கம்பராமாயணம் (கார்காலப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L. | 67 |
| 3. | அணியிலக்கணம் (பாவிக அணி) | 69 |
| 4. | சூரியன் - (வட துருவம்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. | 72 |
| 5. | சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்) வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. | 73 |
| 6. | ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.) Shakespeare's—"Othello" | 75 |
| 7. | சான்றோர் கடன் R. நரஸிம்மன் B.A. (Hons) | 77 |
| 8. | செந்தமிழ்ப்பிராட்டி வருகைப்பத்து. நாவலர். க. சோமசுந்தரப் புலவர் | 78 |
| 9. | வர்த்தமானம் | 80 |

## கலாநிலயம்

### கடவுட் சித்தம் 2.

**க**டவுளின் காரியங்கள் நம்முடைய கருத்தளவே யாகி நிகழ்கின்றனஎன்று எண்ணுமொருகுற்றம் இழைக்காமல் அகலச்சென்றால் முதலில், அதுவே கோடிபெறும். இவ்வாறு எண்ணுவது எவ்வகையில் குற்றமாகக் கொள்ளப்படநிற்கின்றதென்னச் சிலர் கேட்கலாம். இதனால், கடவுளை மனிதர் தம்முடைய நிலைக்கு இழித்துவிடுகின்றாராதலால் அதுகுற்றமாம் என்னக் கூறுவதற்குமேல் இதற்கு விடை வேறொன்றும் வேண்டாவென்று நின்றுவிடுதல் தக்கதன்று. கடவுளுக்கு அதனால் குறையொன்று மில்லை. நம்முடனே சேர்வதால் கடவுளோ யாதும் நலங்கெட்டுப் போகமாட்டார். 'சிற்றினஞ் சேராமை' அனைய அதிகாரங்களைத் திருவள்ளுவர் கடவுளுக்காக எழுதினாரல்லர். இது எவ்வாறாயினும், அதற்குமுன் நிற்கின்ற "பெரியோரைத் துணைக்கோடல்" என்னும் அதிகாரத்தை மனிதருக்காகவே எழுதினார் என்பதில் ஐயமில்லை. ஆதலின், கடவுளை மனிதர் தம்முடைய நிலைக்கழைத்துக்கொண்டு வந்துவிட்டாலும் அவ் வதிகாரத்தில் கூறப்பெற்றிருக்கும் நன்மைகள் மனிதருக்கு வாய்த்துவிடும். இன்னவைகளைக் கருத்துட்கொள்ளுங்கால், மனிதர் கடவுளைத் தம்முடைய நிலைமைக்கிழியக்கொணர்ந்து தம்முடன் நடமாட்டிவைக்கின்றனரே என்று நைவதும் நாணுவதும் நேர்மையல்ல என்னவே இயம்புதல்வேண்டும். வாய்மையே நோக் [illegible] வேறொருவிடயமும் இதனில் ஆழ்ந்துசிந்தித்தற் [illegible] வேறு [illegible] செய்யினும் செய்யாதொழியினும் மனிதர்களோ கடவுளைத் தம்முடைய தன்மையோடு சேர்த்துக் கருதத்தான் மாட்டார்களே. தம்மிடத்தி லுள்ளவொரு அருவருப்பாலோ அல்லது கடவுளின்பால் கொண்ட அச்சத்தினாலோ இது நேர்கின்றது என்பதைப்பற்றி இவ்விடத்தில் ஆராய்வது அவசியமில்லை. ஆயினும் பொதுவாக நிலவுகிற ஒரு பிழையை நீக்க முயலுதல் நலம். கடவுள் மனிதரைப் படைப்பதன்முன் மனிதரே கடவுளைப் படைத்துவிட்டார்களென்றும், படைத்த அக்கடவுளுக்குத் தம்முடைய உருவத்தை மாத்திரமன்றி, தம் ஆசாபாசங்களையும் தம் விருப்பு வெறுப்புக்களையும் தம் மனோவிகாரங்களையும் கொடுத்துவைத்திருக்கின்றனரென்றும், இவ்வகையில் தம் அளவே அளவாகத் தமது கடவுளைக் கொள்வது மானுட இயற்கையாம் என்னவும், எல்லோரும் எங்கும் எல்லாக்காலத்திலும், மானுடசரித்திரத்தின் ஆராய்ச்சிமுடிபாக விளம்பிவருவது வழக்கம். இந்த ஒரு மானுடக்கடவுள் கருத்து (anthropomorphism) மேற்புறப் பார்வைக்கே உண்மைபோலத் தோன்றுமல்லது, உண்ணின்ற ஆழத்திலோ இது சற்றேனும் உண்மையாகாது. ஏனெனில், மனிதரே கடவுளைப்படைத்தனர்என்று வைத்துக்கொண்டாலும், தம்முடைய உருவம் குணம் மனோவிகாரங்கள் முதலியவைகளையே அக் கடவுளிற்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று வைத்துக்கொண்டாலும், பிறகு அவர் அக்கடவுளை வேறாகவே பிரித்து வணங்குவதன் விந்தையைக் கருதுங்கால் ஒரு இரகசியம்

புலப்படலாம். "நம்மைப்போன்ற வுருவமுடையவர்; நாம் உண்பனவற்றை அவரும் உண்ண விரும்புகின்றார். நாம்வெறுப்பனவற்றை அவரும்வெறுக்கின்றார், மகிழ்வனவற்றை மகிழ்கின்றார். நம்மைப்போல்அவருக்கும்கோபம்வரும். இச்சகங்கள் பேசக்கேட்டு நம்மைப்போன்றுஉவகையெய்துகின்றார்" என்றெல்லாம் தன்னைப்போலவே கடவுளைக் கற்பனைசெய்த மனிதன், பின்னர், அக்கடவுளை ஏன் வழிபடத் துவக்கினான் என்பதையுஞ் சிறிது எண்ணுமற்றீராது. "எல்லாவகையிலும் என்னைப்போல் இருப்பினும் அந்தக் கடவுள் என் நிலையைச் சேர்ந்தவர் அல்லர்" என்றநினைவு நிகழ்வதாற்றான் உடனே அக்கடவுளை வேறாக்கிவிடுகின்றான். வழிபடப் புகுந்த அன்றைத்தினமே கடவுளை அவன் தன்னினத்தில்வைத்துக்கொள்ளத் தரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துவிட்டான். இன்னபடி, மானுடக்கடவுள் கொள்கையாளர் கூறுகின்றபடி மனிதன் தான்படைத்த கடவுளையே தன்னினின்றகலப் பிரித்து வேறாக்கி உயர்த்திவிடுவானென்றால், தன்னைப் படைத்தவர் கடவுள் என்று நினைக்குமொருவன் அக்கடவுளை, பின் தன்னிலைக்குக்கொணர்ந்துவிட எங்ஙனம் நினைப்பான், எங்ஙனம் துணிவான்; அதுதான் அவனால் எங்ஙனம் இயலும்! கடவுளை இல்லையென்று மறுப்பவர் தொகை கைம்மண்ணளவு; மற்று, 'நானே கடவுள்' என்று கூறுகின்ற ஒரு சமயக்கொள்கையை வெறுத்து மறுப்பவர் தொகையோ இவ்வுலகளவாகி நிற்பதே இதற்குச் சான்றாகின்றது. இவைகளை யெல்லாம் கருத்துட் கொள்ளுங்கால், கடவுளின் காரியங்கள் நம்முடைய கருத்தளவே யாகின்றன என்று எண்ணுவதன் குற்றமானது, மனிதன் கடவுளைத் தன்னிலைக்கு இழித்துவிடுவதில் அடங்கி யிருக்கின்றதென்று கொள்ளக்கூடவில்லை. அவ்வாறு மனிதன் இழிக்கவுமாட்டான், இழித்தாலும் அதனாற் கடவுளிற்குக் குறையில்லை என்னுமிவ்வரிய இரகசியம் வெளிப்பட்டு நிற்பதே முறைமையாம்.

மற்று, கடவுளைக் குறைத்த பிழை அன்று அக்குற்றம் என்போமாயின், பின், மனிதர் தம்மைக் கடவுளின் நிலைக்கு உயர்த்திக்கொண்டா ரென்னும் பிழையே அக்குற்றமாயிற்றென்று நினைக்கவேண்டி நேரும். இந்நினைவு நேரிதே யென்று தோன்றுமாயினும் ஆழ்ந்து சிந்திக்குங்கால் அதன் அமைதியும் ஐயத்திற்கிடமாகியே முடிகின்றது. ஏனெனில், கடவுளொருவர் இருக்கின்றா ரென்பதை உட்கொண்டவர், அக்கடவுள் தம்மிலும்மேலானவர் எனமதிப்பதே இயற்கை. ஆயின், தாம்செய்கின்றவண்ணமே அனைத்தையும்கடவுளும் செய்கின்றார் என்றுஎண்ணுவதால், தம்மைக் கடவுள்நிலைக்கு இணையாகக் கொண்டுபோய்ச் சேர்த்துக்கொள்ளப் புகுந்தவராகின்றார். இந்தநிலை நிற்பது இயற்கையுமன்று, எளியதுமன்று. கடவுளே நான் ஆவேனோ என்னுங் கையறவுதான் மீண்டும் மீண்டும் தோன்றி மனத்தினை மாறுபடுத்தும். ஒருஇராமகிருஷ்ண பரமஹம்ஸா, ஒரு மகாத்மா காந்தி போன்றவர்களிடத்தில் மனிதர் எவ்வளவு பக்திவைத்திருக்கிறார்கள் என்பதை அறிவோம். தம்மைவிட மேலானவர்கள் அவர் என்ற எண்ணத்தால் இந்தப் பக்தி ஏற்படுகின்றது. அன்னவர்களுடைய சொற்களையும் செய்கைகளையும் அவைகளின் பெருமைக்குரியபடி பாராட்டுகின்றனர். ஆயினும்என்! அவர் தம் வாய்மை அன்பு தியாகம் முதலியவைகளை வியந்து பாராட்டுகின்றஇவர், அந்தவாய்மை அந்தஅன்பு அந்தத்தியாகத்தைத்தாமேநிகழ்த்தவேண்டிய நிலைமைகள் ஏற்படும்போது, அவையனைத்தையும் போக்கிலேபோகவிட்டு எல்லாம்தங்கள் 'சௌகரியத்திற்கு' ஏற்றவாறுதான் பெரும்பாலும் எங்கும் செய்து முடிகின்றவராகின்றார். வாய்மை என்பது, பிறர் தம்மிடத்துச் சொல்லவேண்டிய தொன்றேஎன்றும், அன்புஎன்னும் அதுவோ மற்றவர்கள் மற்றவர்க்குக்காட்டவேண்டியதொன்றேயென்றும், தியாகம்என்பது, தமக்குநஷ்டமும் மற்றவர்களுக்குஇலாபமும் விளையாதபடி எல்லாவற்றையும் அவசியம் ஏற்பட்டால் துறந்துவிட ஆயத்தமாயிருக்கின்றவொரு விளையாட்டே யென்னவும், வாயாற் சொல்லாவிடினும், தம் காரியத்தால் காட்டுகின்றவர்களாய்ப் பெரும்பாலும், மக்களிற் பெரும்பாலோர் விவகரிக்கின்றனர். அன்னவரை நோக்கி, "நீர் ஏன் இச்சமயம் இது செய்தீர். அப்பெரியோர் வாய்மையறத்தை வியந்து பாராட்டுகின்ற நீர், இந்தப் பொய் சொல்லலாமா? (அல்லது) அவர் தம்பொறுமையைப் புகழ்கின்ற நீர், இந்தச் சிறு காரணத்தை முன்னிட்டுஇத்துணைச்சினங்கொண்டிருக்கலாமா?" என அவரை நெருக்கிக் கேட்பாராகில், அதற்கவர், "நானென்ன, ஒரு மகாத்மா காந்தியா, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸாவா, இல்லையே. அந்தப்பொய் அப்பொழுதுசொல்லியிராமற்போனால் என்தலையே போயிருக்கும். அப்பொழுதுநான் பொறுமையுடன் மாத்திரம் இருந்திருப்பேனானால், என்தலைமேல் ஏறியிருப்பான்அவன். உமக்கென்ன தெரியும்!" என்று சற்றேனும்நாணமலுங் கூசாமலுந்தயங்காமலுந் தம் சொல்லின் தகுதியைச் சற்றேனும் அயிர்க்காமலும் எதிர் விளம்புவார். அவரை இக்கேள்வி கேட்டவரும் பெரும்பாலும், சற்றேனும் நாணமற் கூசாமல் அவர் உத்தரம் முற்றிலுந் தக்கதே என்று ஒவ்விக் கொண்டவராக முடிந்திருப்பார் என்பதிலும் ஐயம் இல்லை. இப்படி மனிதருக்கு மனிதரே, பெரியோர் நிலையைத் தம்மால் எய்தஇயலும் என்ற எண்ணம் ஏற்படமாட்டாமையே இயற்கையாயிருக்கின்றதெனின், கடவுள்நிலையில் தாம் இருப்பதாற்றான், கடவுளுந் தம்மைப்போன்றே சிந்தித்துத் தம்மைப்போலவே செய்கின்றனர் என்னும் நினைவு இம்மனிதர் மனத்தில் எங்ஙனம் பிறத்தல் கூடும்.

ஆதலின், கடவுளின்காரியங்கள் நம்முடைய கருத்தளவே ஆகின்றன எனக்கொண்டு விவகரிப்பது குற்றங் குற்றமேயாயினும், அந்தக்குற்றத்தை விளைவிப்பதற்கு ஆதாரமாயிருக்கின்ற பிழை, கடவுளை நமது நிலைக்கு இழித்துக்கொள்ளும் நினைவிலேனும், அல்லது நம்மைக் கடவுள்நிலைக்கு உயர்த்திக்கொள்ளும் நினைவிலேனும், அடங்கியிருக்கவில்லையென்பது இங்கிதன்முன்னே உரைத்தவைகளால் உ[illegible]திருக்கும் என நம்புகின்றோம்.

82
m241,N23 KN
179202



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[63-வது பக்கத் தொடர்ச்சி]

கடுவனே சாலுங் கரி.

பிரிந்தவரை வருத்துகின்ற பருவமதற் காற்றமல்
இரங்கிநனி உழைத்தவொரு அண்ணன்தனக்
காறுதல்கள் உரைத்தனன் இலக்குவன்.

சொற்ற தம்பியு ரைக்கு ணர்ந்துயிர்
சோர்வொ டுங்கிய தொல்லையோ
னிற்ற வின்ன லியக்க மெய்திட
வைகல் பற்பல வேகமே
லுற்று நின்றவி னைக்கொ டும்பிணி
யொன்றின் மேலுட னொன்றராய்
மற்றும் வெம்பிணி பற்றி னாலென
வந்தெ ழுந்தது மாரியே

[உயிர் சோர்ந்து ஒடுங்கிய அநாதியான இராமபிரான், தம்பிசொன்ன வார்த்தைகளால் உணர்வுபெற்று, துன்பம் நீங்கினவனாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தபோது நாட்கள் பற்பல கழிந்தபின், எஞ்சிநிற்கின்றவினையாகிய கொடிய நோயானது ஒன்றின்மேல் ஒன்று தொடர்ந்து மீண்டும் கொடியநோய் பற்றிக்கொண்டதுபோல் பின்பெயல் மாரி வந்து எழுந்தது]

முன்மாரிவந்து கம்பரைப் பற்பலவாறு பாடவைத்தது, இராமபிரானைப் பற்பலவாறு இரங்கவைத்தது, இலக்குவனைப் பற்பலவாறு தேற்றவைத்தது. முன்செய்த தீவினையிருக்கப் பின்னுமது வந்து தோன்றுமாறுபோல், முன்மாரி கழிந்து பின்மாரிதோன்றவும், கம்பர் மீண்டும் பற்பலவாறு பாடுகின்றார், இராமன் மீண்டும் பற்பலவாறு இரங்குகின்றான், இலக்குவன் மீண்டும் பற்பலவாறு தேற்றுகின்றான்.

முன்மாரி பின்மாரி எம்மாரி வந்தாலும் அதனைச் சொன்மாரிகொண்டு வருணிக்க வேண்டியது தனது கடன் என்று கண்டனர் கம்பர்; துவக்குகின்றார்—

நிறைந்தனநெ டுங்குளநெ ருங்கினத ரங்கங்
குறைந்தனக ருங்குயில்கு ளிர்ந்தவுயர் குன்ற
மறைந்தனத டந்திசைவ ருந்தினர்பி ரிந்தா
ருறைந்தனவ கன்றிலுட னன்றிலுயி ரொன்றி

[பெரிய குளங்கள் நீர் நிரம்பின், அக்குளங்களில் அலைகள் நெருங்கின. கரிய குயில்கள் மெலிவடைந்தன, உயர்ந்த மலைகள் குளிர்ச்சி யடைந்தன. விசாலமான திசைகள் இருள்சூழ்ந்து மறைந்தன. துணைவரைப் பிரிந்தவர் வருந்தினர். பெண்அன்றில்கள் ஆண்அன்றில்களுடன் உயிர் உறத் தழுவிக்கொண்டிருந்தன.]

அப்பொழுது, ஊஞ்சலில் ஆடுகின்ற அரம்பை மாதர்தம் அல்குலைத்தொடர்ந்து பறக்கின்ற அவர்களது ஆடைகளில் பட்டுவந்த வாடைக்காற்றானது அதனால் வெப்பமுற்று, நெருப்புப்பட்டு வெந்த பெரிய புண்ணில் கூரிய அம்புகள்பாய்வதுபோல் காமங்கொண்டவர்கள்மேல் வீசியது. பொழிந்த மழையினால் வாரிதியும் நீர் நிறையப்பெற்றது, சூரியனது கிரணங்கள் வெம்மை நீங்கின; எப்பொழுதும் இருளே சூழ்ந்திருந்ததனால், நாழிகைவட்டிலைக்கொண்டு காலத்தை அறியலாமல்லது, இருப்பது பகலோ இரவோவென்று அறியமாட்டாததாயிற்று. மாதர்தம் மழலைச் சொற்களுக்குத் தோற்ற அழகிய கிளிகள் நெற்போர்களில் பதுங்கிக்கொண்டன. அன்னோர்தம் பற்களுக்குத்தோற்ற முத்துக்கள்நிறைந்த அலைகள் உலாவுகின்ற நெய்தல்நில மனிதர்களின் வீட்டுவாயில்களில் அரும்புகள்பொதுளிய புன்னைமரங்கள் பொன்னிறைந்த பைகளை அவிழ்த்தன போன்றன.

நிறங்கருகு கங்குல்பக னின்றநிலை நீவா
வறங்கருது சிந்தைமுனி யந்தணரி னாலிப்
பிறங்கருநெ டுந்துளிப டப்பெயர்வில் குன்றி
னுறங்கலில விலங்கலில நின்றவுயர் வேழம்

[கறுத்துத் தோன்றுகின்ற இரவிலும் பகலிலும், தாம் நின்ற தவநிலையிலிருந்து விலகாமல் அறத்தையேகருதிய சிந்தனையுடைய முனிவர்களாகிய அந்தணர்கள்போலவும் விளங்குகின்ற அரிய பெரிய மழைநீர்த் துளிகள் தம்மேல் விழுவதால் சலிக்காத மலைகள் போலவும், உயர்ந்த யானைகள், தூங்காமலும் இடம்விட்டுப் பெயராமலும் நின்றன]

அறத்தின்கண் சிந்தையை நிறுத்திய அந்தணரென்னவும் சலியாத மலைபோலவும் யானைகள் நின்றனவெனின்,

சந்தினடை யிற்படலை வேதிகைத டந்தோ
றந்தியிட கிற்புகைநு ழைந்தகுளி ரன்ன
மந்திதுயி லுற்றமுழை வன்கடுவ னங்கத்
திந்தியம வித்ததனி யோகியினி ருந்த

[குளிர்கொண்ட அன்னப்பறவைகள், சந்தனமரத்து இலைகளால் வேயப்பட்ட பர்ணசாலைகளில் மேடைகளின் மேல் ஓமகுண்டங்கள் தோறும் அந்திக்காலத்தில் இட்டு எரிக்கின்ற அகிற்கட்டையின் புகையினுள் நுழைந்தன. பெண்குரங்குகள் தூங்கியிருந்த குகைகளில் வலிய ஆண் குரங்குகள், சரீரத்தின் ஒடுக்கத்தால் இந்திரியங்களை அடக்கிய ஒப்பற்ற யோகிகளைப் போல இருந்தன.]

இன்னவாறு வேழமுங் கடுவனுங் கொண்டு முனிவரர்க்கும் யோகியர்க்கும் இடையே ஒரு வேற்றுமை கிடக்கின்றதென்று காட்டுகின்றார்போலும் இப்புலவர். அறங்கருது சிந்தையர் அந்தண முனிவராதல், 'அந்தணரென்போர் அறவோர்' என்னுமப் பொய்யாமொழியினுள் அடங்கும். அறம்என்னும்ஒன்றினைச் சாதிக்க வேண்டும் என்ற ஊக்கம் உள்ளத்துடையவர் முனிவராவார். மற்றவைகளை இவர் ஓரோவழி துறக்கின்றாரெனின், அது, தம் சிந்தை முழுவதையும் அறத்தின்பால் செலுத்தியதால்நேர்ந்ததேயாம். புறஉலகம் இவர்களை எவ்வளவு தாக்கினும் உறங்கலும் விலங்கலும் இலராய்த் தம்நிலை நிற்பவர் இவர். யோகியர்முறைமை இதனிற் பெரிது வேறுபட்டு இருக்கின்றது. அறங்கருது முனிவர் போலன்றி இவர், இந்திரியங்களை அவித்தல்பொருட்டு எக்காலும் தம் உடலின்பால் சிந்தையை வைத்திருப்பவர். தம் இந்திரியங்களை அவித்துப் பொறிகளை அடக்குவதற்கே இவர்களுடைய கருத்தத்தனையுஞ் செலவாக வேண்டியிருக்கின்றது. முனிவர், எவ்வுயிர்க்குஞ் செந்தண்

மை பூண்டொழுகுமாற்ருல் தம்முடைய மேன்மையைத் தெரிவிக்கின்றனர். யோகியர் இந்திரியங்களை அவித்துநிற்கும் ஓர் ஆற்றலையே காட்டுவோராகின்ருர். மந்திதுயில் முழையினுள் தனியிருந்த இக்கடுவனது இந்தியமவித்த ஒரு ஆற்றலைப் பார்மின் என்பார் நம் கம்பர். முன்னே, திருவள்ளுவர்,

ஐந்தவித்தா ளுற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

[ஐந்து புலன்களையும் அடக்கினவனது ஆற்றலுக்கு, அகன்ற வானத்திலுள்ள தேவர்களுக்குத் தலைவனுகிய இந்திரனே போதிய சாக்ஷியாவான்.]

என்று சாற்றினர். தாம் ஐந்து அவித்த ஆற்றலால் கோதமரும் அகத்தியரும், இந்திரனையும் நகுஷனையும் சபிக்கவல்லவர் ஆயினர் என்று எடுத்துக்காட்டுகின்ருர் திருவள்ளுவர் என்று உரையாசிரியர் கருதுகின்றனர். நீத்தார் பெருமையை, அவர் சபிக்கின்ற ஆற்றலிற் காணக் கம்பருக்கு மனம் வரவில்லை. சபிக்கும்படி தூண்டுகின்ற வெகுளிதோன்றுவதே அவர்க்குக் குறையாம். தோன்றியதெனினும் அவ் வெகுளி உடனே நீங்காதாயின் பின்னர் அவர் பெருமையை எங்குக் காண்போம் என்று திகைக்கின்ருர் கம்பர். ஆகையாற்ருன்,

குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது

என்னுமக் குறளில் வரும் 'காத்தல்' என்னுஞ் சொல்லிற்கு, வெகுளப்பட்டோரால் 'தடுத்தல்' என்று பொருள்கண்ட திருக்குறள்உரையாசிரியர் இருவருக்கும் மாருகக் கம்பர், வெகுண்டோர்பால் அவ் வெகுளி 'தங்குதல்' என்னுங் குறிப்புத்தோன்ற, "வெய்யவன் கோபமுற்று மிகச் சினந்தனன் ஒத்தனன் குணக்குன்றிலே" என்று முன் நயம்பட நவிலலாயினர் $.

இன்ன குறிப்புடைய கம்பர்தம் மனத்தில், இப்பொழுது, "நீத்தார் பெருமை" என்னும் அத்திருக்குறள் அதிகாரத்தின் நினைவு வந்துள்ளதென்பதில் ஐயம் இல்லை. 'அந்தணரென்போர் அறவோர்' என்ற அத்திருக்குறள் சொற்களே, இங்கு, "அறங்கருது சிந்தைமுனி யந்தணர்" என்ன மாறிவந்தன. வேழத்தின் நிலையைக்கொண்டு அன்னவர் தன்மையை அறிவுறுத்தினர். இனி, குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளியைக் காக்குமாறு இவ்வாறு என இவர் காட்டியபொருள் நிலைநிற்கவேண்டுமாயின், ஐந்தவித்தான் 'ஆற்றலுக்கு' இந்திரன் கரியாமாறும், உரையாசிரியர் வரைந்துளவகைக்கு வேருகவேண்டுமென்பது அவசியமாகின்றது. அழிந்த இந்திரனைக்கொண்டு, வெகுண்ட முனிவரின் ஆற்றலைக் காட்டுவோர் அவ்வுரையாசிரியர்; அதற்கெதிர் ஐந்துஅவிக்காதஇந்திரன் இழிவுற்றதைக் கண்டு, அவித்தவர்தம் பெருமையை உணரலாமே. இந்திரனைப்போல் மற்றவெலாம் பெற்றிருப்பினும், ஒருவர் ஐந்தவிக்கும் ஆற்றல் இலராயினிழிவடைவார்களேயன்றிப் பெருமைபெருர்என்றவளவே அக்குறள் கூறுகின்றதென்று கொள்ளற்கியலும். "கற்ருர் பெருமைக்குக் கல்லாதார் கயமையே கரி" என்று கூறுமிடத்து, கல்லாதார் எதிர்மறைமுகமாகக் கற்ருர்தம் பெருமையைக் காட்டுவதுபோன்றே, அந்தக்குறளினும், இந்திரனும் ஐந்தவித்தார் ஆற்றலுக்குக் கரியாகின்ருனன்றி அம்முனிவர் வெகுளியின் மிகுதியால் தன்னைக் கரியாக்கினர் என்று புறங்கூறி நிற்கவில்லை. இவையே அந்தக்குறளின் குறிப்பும் பொருளுமாமென்பதை 'மந்திதுயி லுற்றமுழை வன்கடுவன்' தனி யோகியின் இருந்த செய்தியிற் காட்டுகின்ருர் கம்பர். மந்தி அயல் துயின்றிருக்கக் கடுவன் காமவிழைவு கொள்ளாமல் வாளாவிருந்த தன்மையிற்ருன், அங்கத்து இந்தியமவித்தவர்தம் ஆற்றலைக் காண்கின்ருேம். ஆதலின், அத்திருக்குறளை

ஐந்தவித் தாராற்றல் மந்தியுழை நின்ற
கடுவனே சாலுங் கரி

என்ன மாற்றிப்பாடுதல் முற்றினும் ஏற்றதேயாகும் என்று பகரலாம்போல் இப்பாசுரம் அமைந்திருக்கின்றது. ஐந்தவித்தாராற்றலை அவர்தமிந்திரியங்களை அவித்த திறத்தினில் காணலே தக்கது. இன்னணம், உரையாசிரியர்களுக்கு நேர்மாருக, "குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி கணமேயுங் காத்தலரிது" என்னும் அந்தக்குறளிற்குக் கம்பர்கொண்ட பொருளோடு இணங்கும்படி, ஐந்தவித்தாராற்ற லகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங் கரி, என்றவிக் குறளிற்கும் அவ்வுரையாசிரியர்களுக்குமாருகப் பொருள்கண்ட இந்தத் திறமை கம்பரது புலமையினும் வியப்புறவே நிற்கிறது. ஏனைய உரையாசிரியர்களின் பொருளை ஆராய்ப்புகுங்கால் கம்பருக்கு ஓர் கடுவன் வந்து கைதர அமைந்தவிதம் இது நன்று.

கம்பருமிக் கடுவனும் திருவள்ளுவரும் அவர்தம் உரையாசிரியர்களு மொருபுறம் இருக்க, யோகியரைக் கம்பர் மதித்தாள்கின்ற காட்சியைக் கண்ணுறுதற்கு இங்கோர் செவ்வி சிறிது நேர்கின்றது. யோகியர் என்பவர், உடலுக்கும் இந்தியங்களுக்கும் தாம் அடிமையாகாமல், சில பல சாதனங்கள் செய்து அவைகளை அடக்கித் தமக்கு அடிமையாக்கிக்கொண்ட ஆற்றலுடையோ ராவார். இன்னவர் பெருமையை அறியாதவ ரல்லர் நம் கம்பர். ஆயினும், அறங்கருது சிந்தையந்தணரும், சீலமேயன்றிச் செய்தவமறியா உத்தமர்களும், தத்தம் கருமத்தை உற்றுநனி யாற்றுஞ் செம்மையோரும், கம்பருடைய நன்மதிப்பிற்கு, யோகியரைக்காட்டிலும் அதிகமும் பாத்திரராகின்ருர். முன் இராமனது திருமணத்தை முன்னி மிதிலைக்கு வழிக்கொண்ட தயரதன்பரிவாரத்தில்,

கொற்றபல் லியங்க ளெங்குங்
கொண்டலின் துவைப்பப் பண்டிப்
பெற்றவே றன்னப் புள்ளின்
பேதையர் வெருவி நீங்க
முற்றுறு பாரங்க ளெல்லா
முறைமுறை பாசத் தோடும்
பற்றற வீசி யேகி
யோகியிற் பரிவு தீர்ந்த

[வெற்றியுடன் வாத்தியங்கள் எங்கும் மேகம்போல்

$ இவ்விடயங்கள், கலாநிலயம் 1928-வது வருஷத்திய வால்யூம், 754, 755, 756-வது பக்கங்களில் விரிவாக ஆராயப் பெற்றிருக்கின்றன. இச்சமயம் அதனை ஓதிக் கொள்ளல் இக்கட்டுரையின் பொருளை உணர்வதற்கு உதவிசெய்யும்.



முழங்க, அதற்கு வெருவி, வண்டியில் கட்டியிருந்த காளைமாடுகள், அன்னப் பறவைகளைப்போல் மாதர்கள் அஞ்சியோடும்படி, (வண்டியிலிருந்து பிய்த்துக்கொண்டு) தம்மைச்சார்ந்திருந்த பாரங்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகக் கயிருேடு பற்றற எறிந்துபோய், யோகியரைப்போலச் சிரமம் தீர்ந்தன]

என்று எருதுடன் யோகியரைக் கம்பர் நெருங்கக் கூறுவாராயின் அவ்யோகியர் திறத்தில் கம்பர்வைத்துள்ள மதிப்பினை அதிகமும் அயிர்க்க இடமில்லை. காளைமாட்டிற்கு இவ்விடத்து யோகியர்தா முவமையானது ஏகதேசம் அன்று. யோகங்கள்புரியப் புறப்படுகின்ற ஒருவனது நோக்கம் செய்கை முதலியவைகளை இவ்வெருதுகளின் செய்தியைக்கொண்டு அறிதின் ஒப்பிட்டறியலாம். மனைவி மக்கள் பொருள் அனைய ஸம்ஸாரபந்தங்களைவிட்டு யோகசாதனைகள் செய்யத் துவக்குவதற்குப் பெரும்பாலும் ஆதாரமாயிருப்பது, இவைகளால் தனக்கோர் ஆபத்து உண்டென்னும் அச்சமே. மணவிழாவிற்கு வழிக்கொண்டோர் மகிழ்ச்சிக்கு வாத்யம் முழங்குகின்றது; அம்முழக்கத்திற்குமிவ்வெருதிற்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை. எனினும், அப் பல்லியமுழக்குத் தனக்கோர் பொல்லாங்காகவே முடியுமென்னும் அச்சம் இக்காளையின் மூளையில் கலந்துழக்குவானேன்! இவ்விதமே, கருமத்தின் செம்மையிலேனும் மெய்யுணர்வின் ஒளியிலேனும் முதிராத மாந்தர், இப்பிரபஞ்ச நடமாட்டத்தில் தோன்றுகின்ற முழக்கங்களையும் இயக்கங்களையுங்காணுங்கால், வந்தது தமக்கோர் விபத்தென மதிமருண்டு ஓடுகின்றனர். ஓடுங்கால், இக்காளைபோல், தமக்கெவ்வகைத்தீங்குஞ்செய்யாப்பேதை மாதரை முதலில் வெருவவைத்து இரியல் போக்குகின்றனர். இவ்வெருது தனது பாரங்களை முறைமுறை பாசத்தோடு வீசியதென்னின், இது அப்பாரத்தை ஆற்ருமல் அதனை அகற்றதல் பொருட்டே நேர்ந்ததன்று; மற்று, அது வீணே கொண்டவோர் அச்சத்தின் கோலாகலமேயாம். யோகநெறிநாடுபவர், பிறவிப் பற்றுக்களை வலிய அறித்துத் தமக்குரிய கருமங்களைஉதறியோடுகின்ற அவ்வூக்கமும் இத்தகையதே. இன்னபடி வெருவிச் சென்று பரிவு தீர்ந்ததுபோல் ஒருபுறத்தில் வெறித்துநிற்கின்றஎருதினைக் காணுந்தோறும் நகையாதார், நகைச்சுவையே கண்டறியாத மாந்தரெனலாவது நிச்சயம். யோகியர் திறத்தில் நம் கம்பருக்கு இத்தகையதோர் சிரிப்பே சுரக்கின்றது.

யோக மார்க்கத்தின் துவக்கம் இன்னதொரு சித்திரத்திற்குஇயன்றதாயிருக்க, அதன் முடிவாய சாதனையோவெனின், இந்திரியங்களை அடக்கி அகத்துள் சிறைவைத்துக் காவல்பூண்டுநிற்கின்றவொரு ஆற்றலின் தோற்றமே யன்றி வேறன்று. அந்த ஒரு சாதனையையே,

மந்திதுயி லுற்றமுழை வன்கடுவ னங்கத்
திந்தியம வித்ததனி யோகியினி ருந்த

என்னுமிச் சுவைமிகுந்த சொற்கள் சித்தரித்துத் தருகின்றன அவ்யோகியர்களின் ஆற்றலெல்லாம் இவ்வளவுதான், இதன்மே லில்லை. ஞானமார்க்கத்தைக் கடைபிடிப்பவர் மெய்ம்மையைத் தம் புத்தியினுள் வைத்தார்; பக்திமார்க்கத்தைக் கடைபிடிப்பவர் ஈசுவரனைச் சிந்தையில் வைத்தார்; கரும மார்க்கத்தைக் கடைபிடிப்பவர் தருமத்தைக் கருத்துள் வைத்தார். இதனுல் மற்றைய பற்றுக்களெல்லாம் இனி அங்கேயோர் இடம்பெருமல் தாமேஅற்று அகன்றன. யோகியர்களோ தம் இந்திரியங்களையே அகத்துள் வைத்து, அவை தம்மைப் பற்றிக்கொள்ளாவண்ணந் தாம் அவைகளை எந்நாளும்பற்றிக்கொண்டிருப்பவர்களே. இன்னவர் சிந்தனை யெல்லாம் தம் அங்கத்தின்மீதே என்றுஞ் செல்கின்றது. அரவினைப்பற்றிய குரங்கின் செய்தி மிகமிகப் பழையமொழி யாயிற்றே. குரங்கு தனக்குஉரிய கருமத்தைப் பார்த்துக்கொண் டிருந்திருக்குமானுல் போகின்ற பாம்பு தன்வழியே போயிருக்கும்; மற்று, குறும்பு மதியாலோ, வீணே வெருவியோ அந்தப் பாம்பினைப் பற்றிக்கொண்டது. இனி விடுவதற்கில்லை, விட்டால் தன்னையப் பாம்பு கடித்துவிடும். பாம்புந் தன்னை முற்றிலுஞ் சுற்றிக்கொண்டு விட்டது. இப்படியில் அகப்பட்ட அரவம் இறுதியில் அழிந்தொழியலாம்—மற்று, குரங்கின் கதியோ? யோகியர்க்கும் அவர் இந்திரியங்களுக்கும் இடையிருக்கும் இயைபு இத்தகையதே என்று மதிக்கின்ருர் போலும் கம்பர். எது எவ்வாருயினும் எருதையுங் குரங்கையும் தன்னிருகோடியிலும் வைத்திருக்கின்ற இச்சரித்திரம் சுவை மிக உடையதாயினும் யோகியர் சிறப்பிற்குச் சிறிது இடையூருகவே அமைந்திருக்கின்றதென் றெண்ணல் வேண்டும்.

# அணியிலக்கணம்

## பாவிக அணி

[56-வது பக்கத் தொடர்ச்சி]

அடைமொழி யமைதி:—

ஒரு பொருளினை அடுத்துநின்று, அதன் தன்மை உடைமை தோற்றம் முதலியவற்றைத்தெரிவிக்கின்ற மொழிகள், அடைமொழிகள் (epithets) என்று அழைக்கப்படுகின்றன. அடைமொழிக ளிருவகைப்படும். மாலை மன்னன், தானை மன்னன், தேர் வேந்தன், ஏந்திழை மாதராள், என்பனபோல், மரபுபற்றி வரும் அடைமொழிகள் ஒரு வகை. இவை சிறப்பாக ஒன்றையுங் குறிப்பதில்லை. மன்னர்க்கு, மாலை தானை தேர் முதலியனவும், மகளிர்க்கு ஆபரணங்களும், இருப்பது இயற்கையேஎன்றநினைவினுல் எழுவனவாம் இவ் வடைமொழிகள். ஆதலினுல், தார் தானை தேர் இழை முதலியன இருக்கஇயலாதநிலைகளிலுங்கூட இவ்வடைமொழிகள் வழங்கிவருவதை இலக்கியங்களிற் காணலாம். உதாரணமாக— பாம்பின் வாய் நின்ற தமயந்தி, நாடு நகரம் அனைத்தையும் இழந்து திரிந்துசென்ற நளனைத் தேர் வேந்தே (கலிதொடர் காண்டம், 123 வது செய்யுள்) என்று அழைக்கின்ருள். அவனுக்கு அப்பொழுது தேர் இல்லையென்பதுவெளிப்படையாயினும், இவ் வடைமொழிவருத

வியற்கையாகின்றது. அவ்வாறே, அரசிழந்துஇருந்த நளனை "முடிமன்னன்"என்று வணிகர்தலைவனிடம் குறித்துக் கூறுகின்றாள் இவள் (கலிதொடர், 136). அற்ற துகிலும் அருதொழுகும் கண்ணீருமாய்,வெந்துயரிற்கு ஓர் ஆணியெனச் சேதிமன்னனவது மாளிகையில் இருந்த தமயந்தியை, "தாமஞ்சேர் ஓதித் தமயந்தி" (கலிதொடர்கா. 146) என்பர் இந்நப்புலவர். இன்னபடியே பெரும்பாலும் செய்யுளிற்குச் செய்யுள் சில அடைமொழிகள் சிறப்பாக யாதொன்றுங் குறிக்காமல் தோன்றி நிற்பதைத் தமிழிலக்கியங்களினுள் எங்குங் காணலாம். இன்னவைகள், முடியைத் தரித்திருக்கின்ற மன்னவன், மாலையை அணிந்திருக்கின்ற தமயந்தி என்னும்படி இங்குப் பொருள்படாமல், மாலையை அணிதற்கு உரியவள் என்றும், முடியைத் தரிப்பதற்கு உரியவன் என்றும் அன்னவர்களின் மரபினைமட்டுமே தெரிவிக்கின்றன. இவ்வகை அடைமொழிகளை மரபு அடைமொழிகள் என்னலாம். பாவிக அணியின் அமைதியைக் காணவேண்டியது இவ்வகை அடைமொழிகளைப் பற்றி யன்று.

மற்றவகை அடைமொழிகள் பொருளினைச் சிறப்பிக்க வருகின்றனவாதலின் அவைகளைச் சிறப்படைமொழிகள் என்னலாம். இச் சிறப்படைமொழிகள், பெரும்பாலும், புலவர் கூறவருகின்ற விஷயத்திற்கு ஏற்றனவாயிருக்குமாயின், பாவிக அணிக்கு உரிய பண்புகளில் ஒன்று அக்காவியத்தினுள் காணப்படுகின்றதென்று கொள்ள இயலும். புலவர் கூறமல் விட்டனவற்றை இவ்வடைமொழிகள் தம்குறிப்பினுலுணர்த்தவில்லையாயின் அவை பயனற்றனவேயாம். செவ்விதேர்ந்துசிறப்படைமொழிகளை இப்பயனுறச் சேர்க்குந் திறம் நளவெண்பாவினுள் இனிது காணப்பெறுகின்றது. உதாரணங்கள் சில காட்டுவோம்:—

வீதிவாய்ச்சென்ற நளனைக் கண்ணுற்ற மாதரை, வாங்குவளைக்கையார் (சுயம்வர 20) என்பதால், நளனைக் கண்டவளவில் காதலினுல் தம் கைவளைகளும் நழுவும்படி இளைத்துவிட்டனர் என்பது தெரிகின்றது (5 வது வால்யூம் 84 வது பக்கம்)

தமயந்தியினிடம் தூதுசென்றுதிரும்பிவந்த அவ்வன்னம், அவள் காதலை உரைக்காமல் காலந்தாழ்ப்ப, நளன் சலித்தனனேனும் தன்சலிப்பைச் செலுத்தஇயலாமல், அதன் தயையை எதிர்பார்த்து இரந்துநின்ற நிலையைக் கண்டபுலவர், காதற்செய்தியில் வீரம்செல்லாதென்ற தட்பத்தை, "கோளரை வாளால் விருந்திட்ட மன்" என்றும், "திருந்தாரை எமொழிக்கும் வேலான்" என்றும் அடைமொழிகளில் குறிக்கின்றார்-(சுயம்வர 61, 62-வால்யூம் 5 பக்கம் 265).

தமயந்தியின் சுயம்வரச் செய்தியைச் சொல்லித் தேவர்கள் மனத்தில் காமவெங் கனலை மூட்டிடச் சென்றநாரதமுனிவனை, "நெற்றித் தனிக்கண்நெருப்பைக் குளிர்விக்குங் கொற்றத்தனியாழ் குலமுனிவ" னென்று அழைப்பதால், சிவபிரானது நெற்றிக்கண் நெருப்பைக் குளிர்ப்பிக்கவல்ல இம்முனிவர், வேண்டுமெனின், காமத்தீயை மூட்டவும் வல்லவர் என்று புலவர் சுவைபடக் குறிக்கின்றார்—(சுயம்வர 69. 5வது வால்யூம் பக்கம் 307).

தேவர்களின்பொருட்டுத்-தன்பால் தூது வந்து நிற்பவன் நளனே அல்லனே என்னும் ஐயத்தினைத் தமயந்தி எய்திய அந்நிலையை, அவள் காதில் அணிந் [illegible] "[illegible]" என்று அமைப்ப[illegible]

தாற் குறிக்கின்றார்-(சுயம்வர 85.-5 வது வால்யூம் 331வது பக்கம்)

நளனுடன் ஊடல்கொண்டு நின்ற தமயந்தியைக் "கழல் மன்னர் வெள்ளைக்குடை சிவப்ப நின்றான் கொடி" என்றலால், நளன் இவளுக்குச் செய்த இவ்வொரு அநீதியை அவள்தன் தந்தையிடம்சொல்லிவிட்டால் என்னும் என்ற கருத்தைக் குறிக்கின்றார். (கலி. தொ. 22. வால்-5.பக்கம் 568)

தமயந்தியின் புலவியைத்திருத்துவதற்கு அவளது பாதங்களைத் தன் முடிமேல் நளன் அணிந்தபோது, அம்முடியைத் "தொல்லை மணிமுடி" என்றலால், ஒருவருக்கும் வணங்காமல் வழிவழிவந்த அம்முடி இப்பொழுது தமயந்தியின் தாள்களைப் பணிந்ததே எனப் பரிகசம்படக் குறிக்கின்றார்—(கலி. தொ. 24. வால் 5. பக்கம் 583)

பாழ்மண்டபத்தில் தமயந்தியைவிட்டுப் பிரியலாற்றமல் மனந்தவித்த அந்நளனை, "காலன்வடிவாய வேலான்" என்பதனுல், போர்த்தொழிலில் அத்துணைத் திட்பமும்வலிமையும் வாய்ந்தவன், தன்மனைவியின் திறத்தில் இத்துணை இளகினன், என்பதைக் குறித்துக் காட்டுகின்றார் (கலி. தொ. 105)

பாலைவனத்தில் தனியே விடப்பட்ட தமயந்தி, மானையும் மயிலையும் வழிவினவும் நிலையில், அவளை "வான் நாடர் பெற்றிலா மான்" என்று அழைப்பதால், அவள் வானவரைமணந்து பெற்றிருக்கக்கூடிய பதவியை நினைவுபடுத்தி, நளனுக்கு மாலையிட்டதால் அடைந்த கதியையுங்காட்டி, அவளது சலிக்காத கற்பின்மேன்மையைப்பாராட்டுகின்றார். (கலி.தொ.119)

உபகாரம் செய்த தன்னைக் கடித்த கார்கோடகனையாதும் வெகுளாமல் நளன், சீற்றமொன்று மின்றிச் சின வெயிற்றால் தன்னைக் கடித்ததன்காரணம் யாது என்று கேட்டபோது, அவன் ஆற்றலில்லாமையால் அடங்கினவனல்லனென்றும், குணத்தின் மேன்மையாலேயே வெகுளிகொள்ளாமல் இருந்தானென்றும் குறிப்புணர்த்தும்பொருட்டு அவனை, "ஏற்றமரில் கூற்றழைக்கும் மின்கால் அயில்முகவேல் வேந்து" என்று கூறுகின்றார். (கலி. நீ. 12)

இன்னவாறே ஏனைய அடைமொழிகளின் அமைதியையும் ஆராய்ந்து அறிந்துகொள்க. ஆயினும், ஒரு காவியத்தினுள் காணப்படுகின்ற அடைமொழிகள் அனைத்தும் ஒரு குறிப்பினை உட்கொண்டே அமைய வேண்டும் என்னும் ஒருநியதியில்லை. பெரும்பாலும் அவை அன்னவாறு பயனுடையவைகளாய் இருக்குமாயின் பாவிக அணிக்கு வேண்டிய இப்பண்பு அக்காவியத்தில் உளதென்று கொள்ளலாம். மற்று, இந்நளவெண்பாவினுள்ளும், குறிப்பொன்றும் ஏற்காத அடைமொழிகள் இல்லாமல் இல்லை.

வருணனை யனுகூலம்:—

ஒரு காவியத்தினுள் காணப்படுகின்ற வருணனைகளைப் பொதுவருணனை யென்றும் சிறப்புவருணனையென்றும் இரண்டுவகைகளாகப் பிரிக்கலாம். நாடு நகரம் காலம் முதலியவைகளை வருணிக்கின்ற பாகங்கள் பொதுவருணனையில் அடங்கும். இவ்வாறின்றி, சுவையுடைய வொரு செய்தியைச் சொல்லுமொரு பாசுரத்திற் சிற்சிலபோது சிறப்பாகச் சில வருணனைகள் கலந்துவருவதும் உண்டு. அவ்வருணனைகள் பெரும்பாலும் உள்ளுறை உவமம்போல் நின்று, கூறப்படுகின்ற செய்தியைச் [illegible]



கண், பாவிகஅணிதோன்றுவதற்கு உரிய இப்பண்பு அமைந்து இருக்கின்றதென்னலாம். இதற்கு உதாரணங்கள் சில நளவெண்பாவில் காணப்படுகின்றன:-

தான் காதலித்திருந்த நளன் தன்னையோ காதலிக்காமல் தேவர்களின்பொருட்டுத் தூதாக வந்தானே என மாழ்கிய தமயந்தியை, "பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை" என்ற புலவர், விதர்ப்ப தேயத்தைப் 'பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடு' என்ன வருணிக்கின்றார். ஒடுமீ னோட உருமீன் வருமளவும் காத்திருக்கும் கபடமுடையகொக்கும் அந்நாட்டில் குட்டிமீனைக் கொத்திவிடுகின்றதென்றால், அவ்வரசகுமாரி மிகப்பெரிய ஓர் பேதையாவது இயற்கையே என்ற நினைவு தோன்றுமளவில் அச்செய்தி சாலச் சுவைபெறுகின்றது (சுயம்வர, 95. வால்யூம் 5, பக்கம் 351).

சூதாடல் ஆகாதென்று அறிவுறுத்தியஅமைச்சர் நளனைப் "போதிற் சினையாமை வைகுந் திருநாடா" என்று அழைக்கிறார். மலரில் சினைகொண்ட ஆமை தங்குவதாகிய அத்துணை அமைதி வாய்ந்திருக்கும் நிடதநாட்டிற்குத் தலைவனுகிய நீ, அமைதிக்குப் பகையாகிய இச்சூதில் மனம்வைக்கலாமோ என்று ஏங்கும்தன்மை யமைந்திருப்பதால்இவ்வருணனைபற்றி அச்செய்யுள் சுவைபெறுகின்றது. (கலி தொ. 39).

பின்னர், சூதாடத் துணிந்த "நளனை வரால் ஏற மேதி கலக்குஅலைநீர் நாடன்"என்றுகூறுவதினுள்ள நிடதநாட்டின் அவ்வருணனை, நளன் தன்னுடைய அமைதியையும் நாட்டின்அமைதியையும் தன்மதத்தினுல் உழக்கநிற்கின்ற தன்மையைத் தெரிவிக்கின்றது. (கலி தொ—43).

தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நடைபெறப்போகின்றதென்ற ஊக்கத்தால் உற்றெழுந்த ருதுபர்ணனை நளன், "பறிபெறி நெல்லிற் பருவரால் ஓடும் நெடுநாடா"என அழைத்ததில் அடங்கிய வருணனை "அந்நாட்டு வரால்மீனைப்போன்றே அரசனும்வரம்பு கடந்து பாய்கின்றான்" என்ன நினைப்பூட்டி நகைச் சுவைக்கு அனுகூலமாக நிற்கின்றது —(கலிநீ. 39. வால் 6. பக்கம் 184)

வாகுகனுக வேற்றுருவங் கொண்டிருந்த பாகனே நளனுதல் வேண்டுமென் றுணர்ந்த வீமராசன், நளனிடம் நண்ணி, "பாக்குமரத்தின் பாளையைக்கண்டு பாம்போ என்று பெண்குரங்கு ஐயுற்றுத் தெளியாதிருக்குந்திருநாடா" என்றழைத்தபோது, அவனும், இவன் நளனே அல்லனே என்று ஐயுற்றிருந்த நிலை அவ் வருணனையால் சுவைபெற லாகின்றது—(கலி நீ. 59)

இப்படியே, வருணனையால், சொல்லவரும் செய்திகள் சுவை மிகுந்து தோன்றும் பாசுரங்கள் இன்னுஞ்சில இக்காவியத்தினுள் காணப்பெறுகின்றன.

அரிய கருத்துக்கள் எளிதில் எய்தநிற்றல்:—

கவியினது மனத்தின் ஆழத்தில்திரண்டெழுகின்ற மிகஅருமையான கருத்துக்களை, மிக எளியனபோல் தோன்றும்படி ஆங்காங்குக் காவியத்தில் புலவர்கள் அமைத்திருக்கவேண்டுமென்பது, இப்பாவிகஅணிக்குரிய நான்காவது பண்பாம். இப்பண்பிற்கேற்றபடி நளவெண்பாவில் மிகச் சிறந்த செய்யுள்கள் சிற்சில காணப்படுகின்றன.

இப் பிறவிவெந்துயர் வந்தடையாமல் காப்பதற்கு கடவுளின் அடிகளைப் பற்றிக்கொள்வதேயல்லாமல் வேறுகதி இல்லையெனும் அந்நிரந்தரமெய்ம்மையை,

நாராய ணுய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்த்தாற்போற்—பாராளுங்
கொற்றவனைப்பார்மடந்தைகோமானைவாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி (கலிதொ. 33)

என்று எல்லார் மனத்திலும் எளிதில் அழுந்தும்படி பாடி, மீண்டும், இவ்விருவினையினுல் வரும் இன்னல்கள் நீங்குவதற்கும் அதுவே உபாயம் என்பதை,

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—யக்காலங்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையு
மானகத்தேர்ப் பாகன் வடிவு (கலி நீ. 71)

என்று நளனது வாகுகவடிவம் நீங்கியசெய்தியினுஞ் சேர்த்துச் செப்புமித்திறம் பெரிதும் பயனுடைத்து.

கார்கோடகன் கடித்தவிடத்தினுல் நளன் வடிவங் கருகிக் குறுகிய செய்தியை, அவன் தோள்கள், "வறியோர்க்கு ஏமங்கொடாதார் அகம்போற் குறுகின" என்று கூறுவதில் அடங்கியுள கருத்துக்கள் மிகவும் ஆழமுடையன. "உன்னுடைய உதவிக்கு உரியவனுயிருக்கின்ற ஒருவனுக்கு நீ கொடாயாயின், பெறுத அவனினும் கொடாத நீயே நஷ்டம் பெரிது அடைகின்றாய்; உன் இதயமானது குறுகிக்குறுகிப்போய்ப் பாழாகிவிடுகின்றாய்" என்னுமிது மிகப்பெரிய தத்துவமேனும் மிகவும் எளிய வகையில் எடுத்துத்துக்காட்டப்பெற்றிருக்கின்றது.(கலிநீ.11;வால் 6. பக்கம்23)

ருதுபர்னனுக்கு மடைத்தொழில் புரிந்த நளன், சமையலறை சென்றவளவில் அனைத்தும் சமைக்கப் பெற்றன என்பதை,

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை

என்று காட்டுகின்ற இப்பாசுரம், மனமானது தான் கற்றுப்பெற்ற ஞானத்தால் நிறைந்து அமைதியடையக்கூடுமே யல்லாமல், வேறு அதன்கண் மண்பொன்பெண் ஆசைகளெழும்படி விடுவோமாயின் அவ்வாசையைப் பூர்த்திசெய்து நிரப்புவதென்பதோ ஒருபோது மாகாது, என்னும் உயரியதத்துவத்தை உள்ளடக்கி யிருக்கின்றது; அதனைத் தெரிவிக்கின்ற இச்சொற்களும் முறையும் மிக எளியன.

எனின், மேற்குறித்த பண்புகள் நான்கும், தொடர்நிலைச் செய்யுள்களால் ஆகிய ஒரு காவியத்தினுள் காணப்படுமாயின், அக்காவியத்தில் பாவிக அணி அமைந்திருக்கின்றதென்று கூறலாம்

ஒரு காவியம் பாவிக அணி பெறுவதற்கு இந்த நான்கு பண்புகளும் அதனுள் காணப்படவேண்டும் என்று கூறினேமேயொழிய, இவைகள் தவிர வேறு காவியத்திற்கு உரிய பண்புகள் இல்லையென்று நாம் சொல்லவில்லை. இப்பண்புகள் அன்றியும் வேறு சில பண்புகளும் ஒரு காவியத்தில் இருக்கலாம். இப்பண்புகள் இன்றியும் ஒரு காவியம் இருக்கலாம். இவையில்லையாயின், அக்காவியத்தில் பாவிக அணியில்லை என்பதன்றி, காவியத்திற்குரிய இலக்ஷணங்கள் இருக்குமானல், 'காவியம்' என்ற பெயரையே இழந்து விடாது.

# சூரியன்

[58-வது பக்கத் தொடர்ச்சி]

2. துருவப்பிரதேசம்:

i. தேவர் பகல்:-சமசீதோஷ்ணப் பிரதேசங்களைத் தாண்டி வடதுருவ எல்லைக்குள் செல்லுவோமாயின் அங்குக்காணக்கூடியவிந்தை மிகவும்வியக்கத்தக்கதேயாம்.மகம்மேருபர்வதத்தைச் சூரியன் சுற்றிச்சுற்றி வருகின்றான் என்று நமது புராணங்கள் கூறியிருப்பதை வடதுருவ எல்லையில் கண்கூடாகக் காணஇயலும். இமயமலை மேருவென்று புகழப்படினும் இவ்வகைத் தோற்றம் அங்கு இல்லை. வடதுருவ எல்லையில் ஒவ்வொருவருடத்திலும் ஆறுமாதம்வரையில் சூரியன் இடைவிடாமல் காணப்படுகின்றான். கிழக்கில் உதிப்பதும் மேற்கே அஸ்தமிப்பதும், அங்கே இல்லை. நமது உத்தராயண ஆரம்பகாலத்தில், இப்பிரதேசங்களில் அடிவானத்தே (Horizon) சூரியன் செந்நிறத்துடன் முளைப்பான். அங்கிருந்தும் அவன் மேலே செல்லாது அடிவானத்தின் ஓரமாகவே எட்டுத்திக்கையும் வட்டமிடுவான். இவ்வாறு அடிவானத்திலேயே சுற்றிக்கொண்டு சில மாதங்கள் செல்லச் செல்லச் சிறிது சிறிதாக உயரத்தே ஏறுவான். ஆனால் வானத்தை வட்டமிடும் தொழில் மாறாது; மிக உயரத்தில் சென்றாலும் உச்சியை அடைவதில்லை. ஒரு பனைமரம் உயரத்திற்குமேல் ஏறுவதும் இல்லை. வேனிற்காலத்தில் காலை ஏழரைமணிக்குச் சூரியன் நம் நாட்டில் எவ்வளவு உயரம் வானத்தின் மீதே செல்வானோ அவ்வளவிற்கு மேலே எந்நாளும் அந்நாட்டில் உயரச் செல்லான். உயரச் சென்றாலும் வானத்தை வட்டமிடுவானேயன்றி உச்சியில் செல்லப் பெறான். முதன்முதலில் சூரியன் காணப்பட்ட காலத்திற்கும், பிறகு உயர்ந்து காணப்பட்ட காலத்திற்கும், இடையே மூன்று மாதங்கள் கழியும். இந்தக்காலத்தே, சூரியன் மேலே உயரஉயர,வெப்பமும் உடனேவளருமாயினும்,அவ்விடத்துள்ள அழியாப் பனிக்கட்டிகளிடையே யுள்ள குளிர்ச்சி, இவ்வெப்பத்தை விழுங்கிவிடும். பிறகு; நமக்குத் தக்ஷிணாயன காலம் தொடங்கும்போது,சுற்றிலுமுள்ள எல்லாப் பக்கங்களையும் வட்டமிடுகின்ற சூரியன், சிறிது சிறிதாகக் கீழிறங்கி அடிவானத்திற்குஅருகேநெருங்கிக்கொண்டே வருவான். இன்னவாறு இறங்கமூன்று மாதமாகும். எனவே, இவ்வாறு இந்த ஆறுமாதங்களிலும், இடைவிடாத சூரியவெளிச்சம் இப்பிரதேசங்களுக்கு உண்டு.

ii. தேவரிரவு:—இன்னவாறு வடதுருவ எல்லைக்குள், நமது உத்தராயணகாலத்தில்முளைத்த சூரியன், ஆறுமாதகாலம் வரையில் அடிவானத்தே சுற்றிலும் ஓடித்திரிந்து அதன்பின்னே ஒளித்தபோது எங்கும் ஓரே இருள் மூடிக்கொள்ளும். மூடிய இருள் ஆறு மாதம் வரையில் ஓரே இரவாகத் தோன்றும். இக்காலத்தில் அப்பிரதேசத்திலுள்ள உயிர்கள் உய்யுமாறு ஆகாயத்தில் செவ்வான ஜோதி ஒன்று (Aurora Borealis) பெரும்பாலும் இடைவிடாமல் மின்னலின் ஒளியை விடப் பிரகாசமாய் விளங்கும். திங்களினும் ஒளிமிகுந்த இந்த வடமுனைவளரொளியில் சிறுசிறு அச்செழுத்துக்களையும் நாம் படிக்கலாமென்று அந்நாட்டுக்குச் சென்றவர் கூறுகின்றனர்.

iii. தேன் துருவம்:-இவ்வாறே தென்மகா சமுத்திரத்திற்குத் தெற்கிலுள்ள தென் துருவப் பிரதேசங்களிலும் இம்மாதிரியான ஒரு ஒளி(Aurora Australis) காணப்படுகின்றதென்று, அங்குச் சென்று இந்தத் தேன்முனைத் திகழொளியைக் கண்ட மானுமிகள்கூறுகின்றார்.தென் துருவத்தில் ஓரே இரவாய்த் தோன்றச் சூரியன்மறைந்தபோது வடதுருவத்தில், முன் கண்டவாறு சூரியன் ஓரே பகலாய் ஆறுமாதம் விளங்குவான்; வடதுருவத்தில் ஆறுமாதம் இரவாகும்போது தென்துருவத்தி லாறுமாதம் பகலாகும்.

புராணம்:—இப் பூகோளக்காட்சியை எண்ணியே, நமது முன்னோர் வருடத்தை ஒரு தேவதினம் என்றும், அதில் உத்தராயண ஆறுமாதம் பகலென்றும் தக்ஷிணாயன ஆறு மாதம் இரவென்றும் மொழிந்தனர் போலும். மேருமலையின் ககோளஅற்புதம் எனப் புராணங்கள் காட்டும் இது வடதுருவத்திற்குச் சற்றுப் பொருந்துகிறது. சென்றவர் திரும்பிவாராதபடி இருள்செறிந்து கிடக்கின்ற தென்புலத்துள்ள யமலோக வருணனை தென் துருவத்திற்குச் சிறிது பொருந்துகிறது. ஆயினும், அதனுள்ளும் சென்று ஐரோப்பியர்கள் புகைப்படம் முதலியன பிடித்துக் கொணர்ந்து, நமக்கு அக்காட்சிகளைக் காண்பிப்பது இக்கால அதிசயங்களில் ஒன்றாகும்.

காவற் கடவுள்:—இவற்றையெல்லாம் நாம் கண்ணுறும்போது ஆதித்தனது ஒளியே, இந் நிலஉலகிலுள்ள நிலைத்திணையும் இயங்குதிணையுமாகிய ஸ்தாவர ஜங்கம உயிர்களின் பிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததென நமக்கு விளங்கவில்லையா?நம் முன்னையோர் கதிரவனைக் காவற்கடவுளாகிய நாராயணன் என்று எண்ணி வழிபட்டுவந்தனர்.அவ்வழிபாடு, இக்காலத்திலே, உத்தராயணத்தின் தொடக்கத்தில், பொங்கல் ஞான்று புதுநாள் கொண்டாட்டத்தே, சூரியநாராயண பூஜை என்ன நடைபெறுகிறது. சூரியன் மறைந்த காலமே தாமசத் தன்மை வெளியாகும் காலம்; இரவே நோய்களுக்கு ஊட்டம் கொடுக்கிறது. நோயாளி பொழுது விடிந்ததும், சற்றுச் சிகிச்சை பெற்றவன் போன்று ஆறுதல் அடைகின்றான். 'இரவு எப்பொழுது கழியப்போகிறதோ' என்று வருந்தியவன் பகலவனைக் கண்டதும், பலம் பெற்று, எழுகின்றான். இன்னவாறு மனிதர்களும் விலங்குகளும், சூரியனைத் தம்தந்தைபோல் எண்ணி நாடோறும் அவன் வரவை அன்புடன் எதிர்பார்க்கின்றன. அவனின்றேல், மரம்செடிகளுக்குக் காற்றிலுள்ள ஆகாரம் பயன்படாது. இரவெல்லாம் ஒவ்வொரு செடியும் மரமும் பட்டினி கிடக்கின்றன. குணதிசையில் சூரியனைக்கண்ட அக்கணமே இவை பேரவாவுடன் விருந்துண்ணப் புகுகின்றன. அவை கரிமூலவாயுவையுண்ணும்போது பிராணவாயு வேறு பிரிகின்றது. எங்கும் பரக்கும் இளவெயிலோடு இவ்வாறு இளங் குஞ்சுபோல மெல்ல மெல்ல எங்கும் பறக்கும் இளம் பிராணவாயுவாம் (Nascent oxygen) சஞ்சீவிக் காற்றே விடியற்காலையில் வெளிவந்துவீசுகிறது. உஷ்ணப்பிரதேசங்களில் ஸ்தாவரப் பிறப்புகள் பகலில் விருந்துண்டும், இரவில் பட்டினி கிடந்தும் நாட்களைக் கழிப்பதுபோலச் சமசீதோஷ்ணப் பிரதேசங்களில் வசந்த காலத்திலும் கோடை



காலத்திலும், இயற்கைக் காற்றிலுள்ள நல்லுணவு பெறுவதும், மாரிக்காலத்தில் அவ்வாறு பெறாது ஒடுங்கி வீழ்ந்து வருந்துவதும்காண்கின்றோம். ஆகையால், வருடத்தில் ஆறுமாதம் சூரியனைக் காணாத துருவப் பிரதேசங்களில் மரம் செடி என்பனவற்றைக் காணமுடியாது. அப் பிரதேசத்து மாந்தரின் அடுப்புக்கு விறகாவது யாதெனில் பனிக்கட்டியின் இடையேவளரும் ஒருவகைப் பாசியேயாம். இதைப் பகற்காலமான ஆறுமாதத்தில் சேகரித்து இராக்காலமான ஆறுமாதத்திற்குப் பயன்படுத்திக்கொள்வர்.

ஆதித்தன் ஆளுகை:— காவிரி நாடனை கரிகாலனது ஆட்சியிற் சிறந்த நாட்டிலேபோல, ஆதித்தன் ஆளுகையிற் சிறந்த பிரதேசங்களிலும் மாந்தர்களோடு விலங்குகளும் பெரும்பாலும் சாந்தகுண முடையனவாம். சிற்சில இடத்தே வாழும் ஆளுண்ணிகளாகிய அரக்கரும் (Cannibals) புலாலுண்ணிகளான புலி சிங்க முதலிய விலங்குகளும், பிணந்தின்னிகளான கழுகு பருந்து முதலிய சில பறவைகளும் திருந்துவது இல்லை. இவை நீங்கலாக,ஏனைய ஜீவராசிகள் சாகபட்சணிகளாய் இப்பிரதேசங்களில் விளங்குகின்றன. சமசீதோஷ்ணப் பிரதேசங்களிலோ மாந்தர் பெரும்பாலும் சைவ உணவு கொள்ளார். சாக பக்ஷணிகளான மிருகங்களும் சிலவே. பெரும்பாலு மாமிசபக்ஷணிகள் வசிக்கக்கூடிய பிரதேசமாகவே காணப்படுவது இதன் இயல்பாகும். இதைக் கடந்து மேலே சென்றால், துருவப் பிரதேசத்தில், பால் உண்ணும் பச்சிளங் குழந்தைகளுக்கும், அவை பிறந்த சில நாட்களுக்கெல்லாம், கடற்சிங்கத்தின் கொழுப்பைக் கொணர்ந்து சுட்டுருக்கிச் சுவைத் துண்ணக் கொடுக்கின்றனர். மாமிசபக்ஷணம் தவிர வேறு ஒரு உணவு இப்பிரதேச மாந்தர் கொள்ள இயலாது. இந்நாட்டில் வெள்ளைக் கரடிகளும், தோண்டான்களும் மிகக் கொடியவை. அவற்றுள் பின்னவை, ஒன்றை ஒன்று கொன்று தின்று உயிர் வாழ்வனவாம். ஆகையால், சூரிய வெப்பம் அதிகரித்த நமது பிரதேசங்களில் ஜீவர்களுக்குச் சத்துவகுணம் மிகுந்தும், வெப்பம் குறைந்த சமசீதோஷ்ணப் பிரதேசங்களில் ஜீவர்களுக்கு இராஜசகுணம் மிகுந்தும், துருவத்தில் வாழ்வார்க்குத் தாமசகுணம் மிகுந்தும் காணப்படுவது ஆங்காங்கு அவ்வத்தேசங்கள் பெறும் ஆதித்த ஒளியின் பேதத்தாலேயே என அனுமானிக்கலாம்.

கம்பன் கண்ட கதிரவன்:— இவற்றை எல்லாம் நாம் செவ்வனே ஆராயப்புகின், நமது பகலவன் இந் நிலவுலகத்திற்கு ஓரே தன்மையனாக இராமல் பற்பல இடத்தில் பற்பலகுணத்தவனாய்த்திகழ்கின்றானென்றும், அவ்வாறு திகழ்வதால் அவ்வவ்விடத்திலுள்ள மாந்தர்கள், உருவம் குணம் நடிவடிக்கை முதலியவற்றால் வேறுபட்டுக் காணப்படுகிறார்கள் என்றும், அவ்வாறே, மிருகங்கள் பறவைகள் மரம் செடி புழு பூண்டு முதலிய அனைத்தும்ஆதித்தனுடைய அநுக்கிரகத்திற்குத் தக்கவாறே, பேதப்பட்டு விளங்குகின்றன என்றும், எல்லா வுயிர்களின் உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் கதிரவன்அருள் இன்றியமையாததென்றும், இதுபற்றியேஎல்லாவுயிர்களுமாதித்தனிடம் அன்பு செலுத்துகின்றன என்றும்,ஜீவர்களின் அறிவுக்கும் சூரியன்ஒளிக்கும் உள்ள சம்பந்தம் மிகவும் நெருங்கியதென்றும் நாம் காண்கிறோம். இவ்வுண்மைகளை வற்புறுத்தவந்த கம்பர், இவ்வத்தியாயத்தின்தொடக்கத்திலெழுதியுள்ள சிலப்பதிகாரப் பாடலைப் பின்பற்றிச் சூரியனைத் தசரதசக்கரவர்த்தியின் ஆஞ்ஞா சக்கரத்தோடொப்புமைப்படுத்திப் பின்வருமாறுபாடுகின்றார்.

"குன்றென உயரிய குவவுத் தோளினான்
வென்றியந் திகிரிவெம் பரிதி யாமென
ஒன்றேன உலகிடை உலாவி மீமிசை
நின்றுநின் றுயிர்தோறும் நேடிது காக்குமே."

பாலகாண்டம் - அரசியல் படலம் கக.

இதனாலெழும் ஆராய்ச்சி:—ஆதலால், அத்தகையவான்பொருளின் தன்மை யாது என்றும், பரம்பொருள்போல் அதை உலகத்தோர் வழிபடுதலால், இத்தந்தைக்கு எத்துணைத்தேவிமார்கள் உளர் என்றும், அவர்கள் அவன் ஆட்சிக்கு எவ்வாறு உடன்பட்டு உதவுகின்றனர் என்றும், அவ்வாட்சியின் தன்மையான தத்துவம் யாதென்றும், இவ்வுலகு பலவிதமாய்க் காணப்படுதற்குக்காரணம் யாதென்றும்,இரவிலும் பகலவன் செய்யும் தொழில்களின் சிறப்புயாதென்றும் இனி யாராய்வோம்..

மேகத்தான் வெற்பான் இமையான் விழுப்பனியான்
நாகத்தான் நீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணாதார் நின்னை யலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு.

[தொல்காப்பியம் பொருளதிகாரம் சூத்88-நச்சினார்க்கினியம் - கொடிநிலை உதாரணம்.]

---

# சூளாமணி

4. இரதநூபுரச் சருக்கம்.

[53-வது பக்கத் தொடர்ச்சி]

64. அரசன் பாட்டு— தன்னை மறந்து போற்றுகின்றான் அரசன். அரசநிலையிலிருந்தும் இறங்கி இன்பநிலையில் இழிந்து ஆண்டவன் அருள்நிலையைக் காண்கின்றான். இந்நிலையை உலகம் அறியாது கிடக்கின்றமையே அவன் மனத்தை வாட்டுகின்றது; ஈதும் ஒரு வியப்பேயன்றோ? ஆண்டவனுடைய பெருமித நிலையைக் காண்கிறான்; இஃதும் வியப்பையே ஊட்டுகின்றது. இம் மருட்கைநிலையை முரணணிகொண்டுபாடி விளக்குகிறார் தோலாமொழித்தேவர். ஆண்டவனைப் பாடத்தொடங்கினால், ஒருகருத்தையே பன்னிப்பன்னிப் பாடவே மனம் முந்துகின்றது. அக்கருத்திலே நமது மனம் ஈடுபட்டு நிற்கின்ற நிலை அங்ஙனம் உள்ளது. உய்ந்து போவதற்கு ஒரு கருத்தே போதும் என்று தோன்றுகிறது. மறைமொழியைப் பலகால் உருப்போடுவாரைப்போல ஒரு கருத்தையே மூன்று முறை விளக்குகின்றான் அரசன். பண்டைய சமணநூல்களில் இவ்வழக்குப் பெருவழக்காக வழங்குவதைக் காண்கின்றோம். ஆழ்வார்களும், ஆளுடையார்களும் பத்துமுறையன்றோ பன்னிப் பன்னிப் பாடுகின்றனர்.

"வேறெங்கும் காணலாகாத பேரழகு பொலியப் பேரொளி வீசுகின்ற திருமேனிப் பெருமானே! இவ்

வழகும் இவ்வொளியும்எம்மனோர்க்குப்போலஅணி செய்வாரின் அருளாலே புனைந்துகொள்ளும் அணி களால் எழுந்தனவோ ! ஆடையு மறத் துறந்த அம் மானுக்கு அங்ஙனமன்றே? இயல்பாகவே நின்ற நின் அருளறிவு நிலையின் அழகொளியன்றே இவை. என் னே, ஈதொரு வியப்பு இருந்தபடி என்னே! என்னே! அம்மட்டோ? திருமேனிக்குள்ளே திகழ்ந்தொளிர் கின்ற அறிவுநிலையும் அங்ஙனமே இயல்பாக எழுந்த தன்றே ! எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுய் எம் மனோரைப்போலஇடருற்றுஇவ்வாறு அறிவுபெற்ருயோ? கட்டுநீங்கிய வீட்டுநிலையில் இயல்பாகஎழுந்த தன்றே நின்னறிவு. அவ் வறிவுதானும் சிற்றறிவோ? முழுதையும்ஆழ்ந்தறிந்துணர்ந்தமுடிவில்காட்சியாய் முற்றும்முடிவிலா அறிவேயன்றே! ஈதொருவியப்பே. இவ்வாறு உலகைக்கடந்து நிற்கும் பெரியானே!உன் னைக் கடவுள் என மறைநூல்கள் தெள்ளத் தெளிய விளக்கிவைக்கின்றன வன்றே! அந்தோ எடுத்துரைத் தாலும் செவிகொடுப்போர் இல்லையே. நிரல் நிரலாக அடுக்கியுள்ள உலகங்கள் இடைவெளியில் ஞான்று தொங்குகின்றன. அவை அங்ஙனம்இருந்தும் வாழ்ந் துய்வது உன்னருளால் அன்றே? அவையனைத்தும் உன்னுடைமையேயன்றே? உடையானை யறியாதே ஒருங்குநின் றுழல்வதுவோ! நின்னையறிவார் அரியர் அன்றே. ஈதென்னே வியப்பு.

65. பகைத்துக் கொல்லுகின்றவேலோ அம்போ தொட்டுமறியாய் திருமூர்த்தி! என்றாலும் உட்பகை புறப்பகை அனைத்தையும் வென்றுஉயர்ந்துள்ளாய். ஆற்றலுடையாய்! ஈதொரு வியப்பே. ஆதலின் நீயே இறைவன் என மறைநூல்கள் விளக்கமாக எடுத்து உரைக்கின்றன. என்றாலும், அந்தோ நின்னை யறிவர் அரியர் அன்றே.

66. திரு எனப் பெயர்பெற்ற மறுவுடன் பொலிந் தொளிரும் திருமூர்த்தி! முடிவிலா இன்பமுடையானைக் காட்டுமோர் அடையாளமாமன்றே ஈது. மறு (மச்சம்) இருந்தும் மறு (குற்றம்) இல்லை என்னவே இடையறாது மறைநூல்கள் உணர்த்துகின்றன. அவ் வருமறைகளை அன்பினுல் விரித்துரைத்தவனும் நீயே யன்றே? அருமறை காதில் வீழ்ந்ததும் அதனை யருளியவனையேனும் நினைக்கவேண்டாவோ! அந்தோ நினைத்திலரே! நின்னையறிவார் அரியர் அன்றே.

67. இவ்வாறுஅருகப்பெருமானைஏத்துகின்றான். ஆண்டவன் அணிந்துகழித்த திருமலரைத் திருமுடியில் அன்புடன் அணிந்துகொள்கிறான். ஒளி மணிகளோடு ஒலி மணிகளும் திகழ்கின்ற திருக்கதவைத் தாளிடுவித்து, அக்கோயிலின் முற்றத்தை அடைகின்றான்.

68. சாரணர் பாட்டு :—இவ்விருவராய்ச் சென்று உலகிலுள்ளார்க் குண்மையை யருளி வானகவழியே செல்வோர்பலர் உளர். அவர்களே சாரணர் எனப்படுவர். இச்சாரணர் தவத்தால் எழுந்த பேரொளியால் சிறந்து திகழ்வர்.

நலத்திரு மடமக ணயந்த தாமரை
நிலத்திருந் திருசுடர் நிமிர்ந்து செல்வபோல்
உலப்பருந் தவத்திறு லோங்கு சாரணர்
செலத்திரு விசும்பொளி சிறந்த தென்பவே.

என்பர் திருத்தக்கதேவர். அரசன் திருக்கோயிலின் திருமுன்பு வந்தவுடன், அழகியதோர் கடவுளொளி திகழ்ந்தொளிர்கிறது. எங்ஙனம் ? சாரணர் வானின் றும் இழிகின்றனர். உலகுக்கோர் அப்பனை அருகப் பெருமான் வீற்றிருக்க, அழகே யணியாய்ச்செல்வத் திற் சிறந்த திருக்கோயிலை வலமாகச் சுற்றிவருகின் றனர். சிறந்த மணியொலியே இவர்கள்குரல் என்று கேட்டார் வியப்ப, ஆண்டவனை வாழ்த்துகின்றனர்.

69. அரசனே ஆண்டவனைக் கண்டு வியந்து நிற்கின்றான். அதை யறியாத உலகிற்காக வயிறு பிடிக்கின்றான். இச்சாரணர்களோ, அவனுடைய அவாவற்ற நிலையினையும் அன்பினையும் நினைந்து நினைந்து உருகுகின்றனர். உவகைக் கடலில் மூழ்குகின்றனர். ஆண்டவன்மேல் இவர்கள் கொண்டுள்ள காதல் அத்தகையது. இவ்வாறு கடவுளைப் போற்றும் நிலையிலும், அரசனுக்கும் இவர்களுக்கும் வேற்றுமை காட்டிச் செல்லுகின்ற தோலாமொழித்தேவரைப் போற்ற வேண்டாவோ—

"நறுமணம் மிக்க தாமரையையே ஊர்தியாகக் கொண்டு அதனை ஊர்ந்துசென்ற பெருமானே! அவ் வாறு போகும்பொழுதெல்லாம் பல விண்ணவர்கள் உன்னை இமைகொட்டாமல் கண்டுமகிழ்ந்து வணங்கி வாழ்த்தி உன்னுடன் வருகின்றனர். விண்ணோரும் புகழும் நீ, நாங்கள் பாவுமிதனைக் கேட்டுத் தலை மயங்கி யுள்ளம் மகிழப் போகின்றதில்லை. யாங்கள் சொல்லொடு திருமணம் செய்யப்பெற்றேமாய் அதனிலேயே மயங்கித் திரிவதன்றிப் பொருளிலே ஊடுருவிச் செல்லுகின்ற பேறுபெற்றவர் அன்றே. அவ்விண்ணவரோ, உன்னோடே உடன் வருவோராதலின், சொற்பொருளாம் உன்னைநேரிற்கண்டவர்கள். அதற் கேற்பப் பொருளை மணந்தாராய்ப் பேசும் நிலையொழிந்து முனைப்பற்று வணங்குகின்றனர். யாமோ இன்னும் பேசியே பரவுகின்றேம். எனினும் பாடாதிருக்க முடியவில்லையே. இந்த உலகெல்லாம் நின்னைக்கண்டு உயர்நெறிபெற்றுப் பேரினின்பத்திலே மகிழ்ந்திருக்க வேண்டி அறநெறியில் நிலைநின்ற பெருமானே! இவ் அன்புவடிவத்தைக் கண்டதும் எங்களுடைய காதல் பெருக்கெடுத் தெழுகின்றதே. அதனை அடக்கமாட்டோமாய் வாய்விட்டுப் பாடுகின்றேம். அத்துணையே.

70. "நறுமணமிக்கதாமரையின்இதழ்கள் நெருங்கிய பூவின்மேல் ஊர்ந்துசென்றஎங்கள்பெருமானே! நின்னருகே வந்து அச்சத்தோடு மன்போடும்நாங்கள் ஏத்திநிற்பதைக் கண்டு தலைகால்தெரியாது தற்புகழ்ச்சியால்நீ மயங்கி மகிழப்போவதில்லை; திரும்பிவாராத பெற்றியதாம் வீட்டுலக இன்பத்தேஇவ்வுலகனைத்து மகிழவேண்டி அறநெறி நின்ற நின் அன்புவடிவிலே ஆராத காதலுடையோம். அதனை அடக்கமாட்டாது வாய்வெருவாநிற்கின்றேம், அத்துணையே.

71. மணமயங்கு தாமரைமேல் வான் வணங்கச் சென்றாய்! எம்மையும் மறந்து நின்னுடைய குணங்களையாம் பரவாநிற்கின்றேம். அதனை, ஏற்றுக்கொண்டு மகிழ்பவன் நீ யல்லன், என அறிவோம். எனினும், உலகம் நின் அருள்நிலையைக் கண்டு உட்பகையாறி மனங்குளிர்ந்து, வீட்டுலகில் உவகைபெறுமாறுஅற நெறியில் நிலையாகநின்ற நின்பால் போராத பெருங் காதலுடையோமாய்ப்பிதற்றுகின்றேம். அத்துணையே.

72. குற்றமற்ற இம்முனிவர்களுக்குச்செல்வமாய் இருப்பவல் அவ் வருகனே. அவனுடைய செவ்விய திருவடியின்மேல் வைத்த காதலால் எழுகின்றது இவ்வழகிய இன்னிசை. வேற்றொலி வந்து இதனைக் கெடாதபடி எங்கும் அமைதியே கூத்தாடுகின்றது. இதனிடையே இவ்வின்னிசை எங்கும் பரவுகிறது. உலகம் நிலையாததென்று உணர்வதே ஓதி என்பது. 'அவதிஞானம்' என்பர் நச்சினர்க்கினியர். இதனை வீட்டேணியின் முதற்படி வென்னலாம். இதனையுடைய உயிர்கள் இவ்வின்னிசையைக் கேட்கின்றன. எவ்வளவுதொலைவு இவ்வின்னிசைஒலித்ததோ அவ் வளவு தொலைவில் உள்ள அத்தகைய உயிர்கள், இவ் வின்னிசை கேட்டுத் துன்பமேஇல்லையாய் [illegible] றன.

---



199203

# ஒத்தெல்லோ

## [Shakespeare's—" Othello "]

[54-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 3.

இடம்:—வெனிஸ் நகரத்துச் சபாமண்டபம்.

துரைத்தனத் தலைவரும், செனட்சபை அங்கத்தினரும் ஒரு மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருக்கின்றனர். சில உத்தியோகஸ்தர் அருகு நிற்கின்றனர்.

---

தலைவர்:— நம்பிக்கை தருகின்ற ஒற்றுமை இச் செய்திகளில் இல்லை ! [1]

முதல் செனட் சபை அங்கத்தினன்:—அப்படித் தான் அவை பொருந்தாம லிருக்கின்றன. என் கடிதங்கள் நூற்றேழு கப்பல்களெனச் சொல்லும். [2]

தலைவர்:—எனது, நூற்று நாற்பது. [3]

இரண்டாம் செனட் சபை அங்கத்தினன்:-எனது, இருநூறு: மற்று, இவை நேரிய கணக்கின்மீது தாவவில்லையாயினும் [4]—குறியே கூறுகின்ற இவ்விடங்களில் பெரும்பாலும் அது பேதப்பட்டிருக்குமாதலின், [5]—துருக்கிய கப்பற்படை யொன்றையும், சைப்ரஸ்ஸை நோக்கி வருவதையும், அவைகளெல்லாம் நிச்சயப்படுத்துகின்றன. [6]

தலைவர்:—இல்லை, மதிப்பதற்குக் கூடியதாகவே இருக்கின்றது அது [7]. இப்பிழையினுள் யான் அத்துணை துணிவு புகவில்லை [8]. மற்று, முக்கிய விஷயத்தை நான் அச்சமுடன் அங்கிகரிக்கின்றேன். [9]

மாலுமி:—(உள்ளே) யாரங்கே ஹோ ! யாரங்கே! யாரங்கே, ஹோ !

முதல் உத்தியோகஸ்தன்:-கப்பற்படையினின்று ஒரு தூதன். [10]

[மாலுமி ஒருவன் வருகிறான்.]

தலைவர்:—இப்பொழுது, என்ன காரியம் ?

மாலுமி:—துருக்கிய பிரயத்தனம் ரோட்ஸை நோக்கிச் செல்கின்றது; இவ்வாறு துரைத்தனத்திற்குத் தெரிவிக்கும்படி அஞ்சிலோ அவர்களால் கட்டளையிடப் பட்டேன். [11]

குறிப்பு:—வெனிஸ் துரைத்தனத்திற்கும் துருக்கியருக்கும் நடந்துகொண்டிருந்த போரின் சம்பந்தமாக, இத் துரைத்தனத்தாருக்கு, தம் கப்பற்படை அதிகாரிகள் அனுப்பியுள்ள வதந்தியைப்பற்றி, தலைவரும் செனட்சபை அங்கத்தினரும் ஆலோசித்துக்கொண்டிருக்கின்றனர். இதற்குத்தான் ஒத்தெல்லோவும்அவசரமாக வரவழைக்கப் பட்டிருக்கிறான். இவ்விஷயமாகச் சில செனட்சபை அங்கத்தினர்களுக்குத் தனித்தனி கடிதங்கள் வந்திருக்கின்றனவென்பது பின்வரும் சம்பாஷணையில் தெரிகிறது.

(1) நமக்கு வந்த கடிதங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் வேறுபடுவதால், இச் செய்தியில் நம்பிக்கைகொள்ள இயலவில்லை.

(2) அவை - கடிதங்களில் வந்த செய்திகள். துருக்கியர் கப்பற்படையெடுத்து வருகின்றனர், என்பதைஅக் கடிதங்கள் தெரிவிக்கின்றன. அப்படையிலுள்ள கப்பல்களின் தொகை 107 என்று, இம் முதல் செனட்சபை அங்கத்தினருக்கு வந்த கடிதத்தில் காணப்படுகின்றது.

(3) அப்படையில்,140கப்பல்கள் இருப்பதாக எனக்கு வந்த கடிதத்தில் காணப்படுகின்றது-என்பதுபொருள்.

(4) நேரிய கணக்கின்மீது தாவவில்லையாயினும்—ஒன்றினைத் தாவிப்பிடிக்க முயல்கின்றவனுக்கு அப்பொருள் முழுவதும் எட்டாமல், ஒவ்வொரு பாகமே தீண்டப்படுவதுபோல், பகைவருடைய படையில் எத்தனை கப்பல்கள் இருக்கலாம் என்று தம் ஊகத்தால் அறியமுயன்று இக் கடிதங்களை எழுதினவர்களில் ஒருவரும் சரியான கணக்கைத் தெரிந்துகொள்ள மாட்டாமல் மாறுபட்டாலும்—என்பது பொருள்.

(5) பகைவர்படையில் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன என்று எண்ணிப்பார்த்து ஒருவராலுங்கூறமுடியாது; குறிப்பாக இவ்வளவு இருக்கின்றன வென்றுதான் இது போன்ற விஷயங்களில் சொல்லவியலும். அப்படி நிச்சயமாக எண்ணிப்பார்ப்பதின்றிக் குறிப்பாகவேகூறும் இது போன்ற விடயங்களில், பலபேருடைய மதிப்புப் பலவாறாக மாறுப்பட்டிருப்பதே யியற்கையாகையால்-என்பது பொருள். (அது - கணக்கு)

(6) கணக்கு பேதப்பட்டிருக்குமாதலின்......நிச்சயப்படுத்துகின்றன—என்று கூட்டிக்கொள்க. துருகிப்படை ஒன்றுபுறப்பட்டிருக்கின்றதென்பதும், அப்படை, ஸைப்ரஸ் என்னும் இடத்தை எதிர்க்கச் செல்கின்றது என்பதும், நிச்சயம். ஸைப்ரஸ் - ஒரு தீவின் பெயர்.

(7) அவ்வாறுதான் நாம் மதிக்க வேண்டும் - என்பது பொருள். 'இல்லை' என்பது இங்கு உடன்பாட்டுவழக்கு.

(8) கடிதங்களில் காணப்படும் பிழையைக் கொண்டு நான், இந்தச் செய்திக்கு ஆதாரமே யில்லையென்று அத்துணை துணிந்து நிர்ப்பயமாய் இருந்துவிடவில்லை - என்பது பொருள்.

(9) பகைவர் படை புறப்பட்டிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டு, ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று அறிவேன்—என்பது பொருள்.

(10) ஒரு தூதன்......வருகிறான் - என்று முடித்துக் கொள்க. இது வெனிஸ்நகரத் துனத்தைச் சேர்ந்த கப்பற்படை; போர்க்களத்திற்குச் சென்றிருப்பது.

(11) துருக்கிய பிரயத்தனம் - துருக்கியரது கப்பற்படையெழுச்சி. ரோட்ஸ் என்பது வேறு ஓர் தீவு. அஞ்சிலோ—வெனிஸ்நகரத் துரைத்தனத்துக் கப்பற்படையை

தலைவர்:—இந்த மாறுதலைப்பற்றி எவ்வகை சொல்கின்றீர். [12]

மு. சே. அ:—அறிவின் எந்தச் சோதனையினாலும் இருக்க இயலாது இது [13]. நம்மைப் பொய்ப் பார்வையில் வைத்திருப்பதற்கு ஓர் விளையாட்டுக் காட்சியேயாகும் [14]. துருக்கனுக்கு ஸைப்ரஸ்ஸின் அவசியத்தை நாம் கருதி, ரோட்ஸைக் காட்டிலும் துருக்கனுக்கு அது அதிகமும் அக்கறையுடையதா யிருப்பதுடன், போர்க்குரிய கட்டமைந்து அத்துணை நின்றிடாமல், மற்றும் ரோட்ஸ் அணியப்பெற்றுள்ள ஆற்றல்கள் முற்றிலும் குறைவுற்றிருப்பதால், அதனை அவன் அதிகமும் எளிய வாதினால் எதிர்க்கலாம் என்பதையும் மீண்டு மறிந்துகொள்ள நாம் நமக்கே இடந்தருங்கால் - இதனை நினைவுசெய்வோமாயின், பயனற்றவொருஅபாயத்தை எழுப்பி மேற்கொள்ள, சுலபமும் இலாபமுமான முயற்சியைப்புறக்கணித்து, தனக்கு முதல் அக்கறையான வொன்றைக் கடைசிக்கு விட்டுவிடும்படி அத்துணைத் திறமையற்றவன் துருக்கன் என்று நாம் எண்ணலாகாது. [15]

தலைவர்:—இல்லை; நிச்சயமாகவே, அவன் ரோட்ஸிற்கு அல்லன்.

முதல் உத்தி:—மேலும் செய்தி இங்குளது.

[ஒரு தூதன் வருகிறான்.]

தூதன்:—துருக்கியர், மாண்புடைப் பெருந்தகைப் பெரியீர் [16], நேர் நெறியே ரோட்ஸ் தீவின்பால் செலுத்திச் செல்வாராகி அங்குப் பின்னொரு கப்பற் படையுடன் சேர்ந்துகொண்டனர் [17]

முத-சே-அங்:—ஆம், அப்படித்தான் நினைத்தேன் நான் [18]. உன் ஊகத்தின்படி எத்தனை ? [19]

தூதன்:—முப்பது கப்பல்கள் கொண்டது; இப்பொழுது, ஸைப்ரஸ்ஸின்பால் அவர்கள் நோக்கம் வெளிப்படையாகத் தோன்ற மீண்டு பின்வழிக் கொண்டுளர். தங்கள் நம்பிக்கையும், மிக்க திறமையும் வாய்ந்த, தங்கள் உத்தியோகஸ்தர் மான்டேனோ அவர்கள், தம் கடமையைச் செலுத்துவதுடன், இதனைத் தங்களுக்குச் சமர்ப்பித்துத் தன்னை நம்பும்படி உங்களை வேண்டுகின்றார். [20]

தலைவர்:—எனின், ஸைப்பரஸ்ஸிற்குத்தான் என்பது நிச்சயம்—மார்க்கஸ் லூஸிகாஸ், இவர் நகரத்தில் இருக்கின்றாரல்லரோ ? [21]

முத-சே-அங்:—இப்பொழுது அவர் பிளாரன்ஸ் [22] சென்றிருக்கின்றார்.

நடத்திச்சென்றிருக்கும் உத்தியோகஸ்தன் பெயர்.

(12) மாறுதல் - துருக்கிய கப்பற்படை, ஸைப்ரஸ்ஸை எதிர்க்கச் செல்வதாக நமக்கு வந்த கடிதங்களெல்லாம் தெரிவித்திருக்க, அதற்குமாறாக அவை ரோட்ஸைநோக்கிச் செல்வதாக இத்தூதன் கூறுவதற்கு என்ன காரணம் அல்லது சமாதானம் கூறுவீர்—என்பது பொருள்.

(13) துருக்கியர், ஸைப்ரஸ்ஸை விட்டு, ரோட்ஸின் மேல் படையெடுத்துப் போவதன் நோக்கம் யாதாயிருக்கும் என்று நம்முடைய அறிவைச் செலுத்தி, சோதித்துப் பார்க்கப் பார்க்க, ஒரு காரணமுந் தென்படாமையால், இவன் கொண்டுவந்த இவ்வதந்தி நிசமாயிருக்க இயலாது என்பதே தக்கமுடிவாம்—என்பது பொருள்.

(14) ஸைப்ரஸ்ஸைக் காப்பதற்கு நாம் தக்க ஏற்பாடுகள் செய்யாதபடி, நம்மை வஞ்சிப்பதற்காக அவர் ரோட்ஸிற்குப் போகின்றவர்போல் பொய்யாகத் தோற்றுவிக்கின்றனர்—என்பது பொருள்.

(15) இந்த யுத்தத்தில், ஸைப்ரஸ் தீவைக் கைப்பற்றுவதே துருக்கருக்கு மிகவும் அவசியமாகும்; ஆகையினால் அதனிடத்திலேயே அவர் நோக்கம் வைத்துத் தம் அக்கறையை முதலில் செலுத்துவார். படைப் பலமும் அரண் வலியும் மிகவும் குறைந்து இருக்கிறது அது. ஆகையால் ஸைப்ரஸ்ஸை எதிர்க்காமல் ரோட்ஸை நோக்கிச் செல்லுவது மதியீனம். மேலும், அதனில் நாம் தக்க காவற்படை அமைத்திருக்கின்றோம். எனினும், சுலபமும் அவசியமுமான ஸைப்ரஸ்ஸை விட்டு, கஷ்டமும் அனாவசியமுமான ரோட்ஸை எதிர்க்கச் செல்கின்ற அத்துணைச் சூழ்ச்சித் திறமையற்றவர் நம் பகைவர் என்று நாம்எண்ணலாகாது, என்பது இதன் கருத்து.

கருதி...நின்றிடாமல்...குறைவுற்றிருப்பதால்...இடந்தருங்கால்...புறக்கணித்து...விடும்படி...திறமையற்றவன் ...என்று எண்ணலாகாது, என முடித்துக்கொள்க.

போர்க்குரிய கட்டமைந்து-போரிற்குரிய கட்டுக்காவல்கள் அமைந்து.

அணியப் பெற்றுள்ள ஆற்றல்கள் - நாம் ரோட்ஸிற்கு அமைத்துள்ள படை அரண் முதலிய காவல்கள்.

அவன் - துருக்கன்.

எளிய வாது - வாது, இங்குக் கையாற் செய்யும் வாது, அதாவது போர்.

நமக்கே நாம் இடந்தருதல்—மேற்சொன்ன எண்ணங்கள் தாமே வந்து நம்மை அறிவுறுத்துகின்றன. அவைகளுக்கு இடந்தந்தால் போதும்; நாமொன்றும் முயன்று சிந்தனை செலுத்தவேண்டிய அவசியம் இங்கில்லை; இதனை அறிந்துகொள்வது அத்துணை சுலபமாம்—என்பது பொருள். திறமை—சூழ்ச்சித் திறமை.

(16) துரைத்தனத் தலைவரையும் மற்ற அங்கத்தினரையும், தூதன் இப்படி அழைக்கின்றான். முதனூலில், 'பெரியீர்' என்பதற்குரிய ஆங்கிலச் சொல் அவாய்நிலையாய் நிற்கின்றது.

(17) துருக்கியர் ரோட்ஸைக் குறித்துச் செல்லும் வழியில் தம்கப்பற்படையுடன் பின்னும் ஒன்றைச் சேர்த்துக் கொண்டனர்—என்பது பொருள்.

(18) இவன் முன் இப்படி நினைக்கவேயில்லை. துருக்கியர்ரோட்ஸைநோக்கிப்போவதுபோலப் பாவனைசெய்து தம்மை வஞ்சிக்கப்பார்த்தனர் என்று இவன் கூறினனேயொழிய, வேறோர்கப்பற்படையைச் சேர்த்துக்கொள்ளச் சென்றனரென்று இவன் நினைக்கவும் இல்லை, சொல்லவும் இல்லை. விஷயந் தெரிந்தபின் 'முன்னேயே அப்படித்தான் நினைத்தேன் நான்' என்று கூறித் தம் புத்திசாலித்தனத்தைச் சாதித்துக்கொள்ள முயல்வது எல்லோர்க்கும் இயற்கை; அரசியல் தொழிலில் அவசியமுமாம்.

முன் இந்தச்செய்திகள் ஒன்றையும் நம்பவில்லைஎன்று ஆரம்பித்த துரைத்தனத் தலைவர், மற்றவர் அபிப்பிராயம் அதற்கு மாறாக இருப்பது தெரிந்தவுடன், தானும் அதே அபிப்பிராயமுடையவராக இருந்தது போல் பாவித்ததும் இந்த இயற்கையின்பாற் படும். அரசியலில் சம்பந்தப்பட்டிருப்பவர் தெரிந்தோ தெரியாமலோ இந்தத் தந்திரங்களாலன்றி, பிழைக்க வேறு வழியில்லை.

(19) எத்தனை கப்பல்கள் அப்படையில் இருந்தன—என்று முடித்துக்கொள்க.

(20) ஒத்தெல்லோ போவதன்முன், ஸைப்ரஸ் தீவின் ஆட்சியதிகாரியாக (Governor) இருந்தவன் மான்டானோ

(21) மார்கஸ் லூஸிகாஸ் என்பவர், யாரென்பது தெரியவில்லை. இவ்விஷயத்தில் அவர் வேண்டப்படுகின்று

தலைவர்:—எம்மின்று அவருக்கு எழுதுங்கள். வேகவேக அதிவேக விரைவாக அனுப்புங்கள்.

மு. சே. அ:—ப்ரபான்ஷியோவும், சூர மூரனும் இதோ வருகின்றனர்.

என்பதுமாத்திரம் தெரிகிறது. இப்பெயரிலிருந்து இவர் கிரீஸ்தேயத்தைச் சேர்ந்தவர் என்று ஊகிக்கலாம். ஸைப்ரஸ் தீவு கிரீஸ் தேசத்திற்கு அருகிலிருப்பதால், அவரிடமிருந்து ஸைப்ரஸ்ஸைப்பற்றிய செய்திகள் கேட்டு அறிந்துகொள்ள இயலும் என்று எண்ணி அவரை வேண்டினர் போலும்.

(22) பிளாரன்ஸ் = ஒரு நகரத்தின் பெயர்.

---

# சான்றோர் கடன்

தமிழ்மறை கண்ட திருவள்ளுவர் சான்றோர்க்குரிய கடமைகளையும் குணநலன்களையும் வகுத்துக் கூறுவான் றொடங்கி

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று, தீமை செய்தோர்க்கு நன்மைசெய்யாவிடின் சால்புஎன்னுங்குணம் முற்றுப்பெறாதெனக்கூறினார். இக்குறள் நன்கு உற்றுநோக்கி ஆராயத்தக்கது.

இதன்போருள்:-இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் = தமக்கின்னாதவற்றை (தீங்கை)செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின், சால்புஎன்ன பயத்தது = அச்சால்புவேறென்ன பயனையுடைத்து! (பரி - உரை)

'இன்னாசெய்தார்க்கும்' என்ற அச் சொற்றொடரிலுள்ள உம்மை உயர்வுசிறப்புப் பொருளில் வந்தது என்பது தொனிப்பொருளை உற்றுநோக்குவார்க்கு விளங்கும். இதனான், இனியசெய்தவர்களைப் பார்க்கினும் சான்றோர்க்கு இன்னாசெய்தவர்கள் சிறந்தவர்களென்பதும், அதனான் இனிய செய்தவர்களைப்பார்க்கினும் இன்னாசெய்தவர்களுக்கே சான்றோர் தங்களாலியன்றவரை இனியசெய்யக் கடப்பாடுடையவர்கள் என்பதும் இவ்வும்மையால் பெறப்படும். "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்" என்ற விதனால்; 'தீமைசெய்தவர்களுக்குக்கூட நன்மை செய்யாவிட்டால்— என்றபொருள் நன்கு தொனிப்பது வெளிப்படை.

தொடர்பு பற்றாது இயல்பாக எல்லாவுயிர்களினிடத்தும் செல்வதாகிய அருளுடைய துறவிகள், பல சுடரோடு கொழுந்துவிட்டு எரியும் தீயில் தோய்ந்தாலொத்த தீங்கைத் தமக்கு ஒருவன் செய்தாலும், கூடுமாயின் தீங்கு செய்தவனைக் கோபியாதிருத்தல் நலமென்பதை,

"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று."

என்று கீழே அறத்துப்பாலில் துறவறவியலில் கூறினார். தம்மேல் பகைமை கொண்டு ஒருவன் தீங்கு செய்தாலும் அவனுக்குப் பதில்தீங்கு செய்யாமல் இருத்தலே துறவிகளின் கொள்கை என்பதை,

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

என மீண்டும் துறவறவியலில்கூறினார். ஆகவே, துறவிகளுக் குரிய குணநலங்களைக் கூறுமிடத்தும், தமக்குத் துன்பத்தைச் செய்தவரிடம் கோபம் கொள்ளாதிருத்தல் நலம் என்றும், அவர்களுக்குப் பிரதியாகத் தீங்கு செய்யாதிருத்தலே அன்னாரின் கொள்கையென்றும் மட்டுமே கூறினார்.

ஆனால், சான்றோர் குணநலங்களும் கடமைகளும் மேற்கூறியவற்றினின்றும் பெரிதும் வேறுபடுகின்றன. துறவிகளைப் போலவே சான்றோரும் தமக்குத் தீங்கு செய்தவர்களிடத்தில் சினம் கொள்ளக்கூடாது. அப்படியே மறுதீங்கு இழைக்கக்கூடாது. இவ்விரண்டும் சான்றோர்க்கும் துறவிகளுக்கும் பொதுவான கடமைகளாயினும் சான்றோர் தமக்குத்தீங்கு செய்தவர்களுக்குச் செய்யவேண்டிய மற்றொரு கடமையும் உண்டு. அதைத் திருவள்ளுவர் துறவிகளின் கடமையாகக் கூறாது சான்றோர்க்குரிய கடமைகளுளொன்றாகக் குறிப்புப்பொருளில் கூறுகிறார். அதாவது - சான்றோர் தமக்குத் தீங்குசெய்தவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். முதலாவது அவர்களுக்கு நன்மைசெய்யவேண்டியதே சான்றோர்க்குத்தலையாய கடனாகும்.

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்' என்ற அவ்வடியில் இந்தக் கடமைப்பொருள்தான் தொனிக்கின்றது.

சான்றோர் தமக்கு இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய எப்படிக் கடமைப்பட்டவர்கள்? நாம் ஒருவனுக்குக் கடமைப்பட்டவர்களாயிருந்தால் அவனிடமிருந்து நாம்ஏதாயினும் நன்மையடைந்திருக்கவேண்டும். அந்தமுறையில் இன்னா செய்தவர்கள் சான்றோர்க்கு என்ன நன்மை செய்கிறார்கள்? இன்னவை ஆராய்ச்சிக்குரியன.

இழிந்தோர் செற்றம் பூண்டு 'இன்னா' எனக் கருதிச் செய்வனவற்றைச் சான்றோர்கள் இன்னாவாகக் கொள்ளார். இழிந்தோர்தம் உடைமையையும்உடலையும்தாங்கள் போற்றுவதுபோல் சான்றோரும் போற்றுவார்கள்எனக் கருதி அவர்களிடம் பகைமைகொண்டு அவர் பொருளை யபகரிப்பர். இல்லையேல் சான்றோர்தம் உடலுக்கு ஏதாவது தீங்கினை யிழைப்பர். ஞான வைராக்கியத்திலே பழுத்து முதிர்ந்த சான்றோர், பொருளையும் உடலையும், இவ்வாழ்க்கையில் தங்களைத் துன்பத்திற் கிலக்காக்கும் விரோதிகளாகவே கொண்டிருப்பார். இவைகளெல்லாம் சான்றோருக்கு விரோதிகள் (பிரதிகூலங்கள்) ஆகையால், ஒருவன் தன் விரோதிக்கு நேர்கிற துன்பத்தைக் கண்டு களிப்பதுபோல, இவைகளுக்கு இழிந்தோரால் நேரும் தீங்கினைக்கண்டு களிப்பர். ஆகவே, இன்னாசெய்தார், சான்றோரது பகையை யழிக்க உதவிசெய்தவர்களாகின்றார்கள். 'இன்னா' எனக்கருதி இனிமையே செய்த இழிந்தோரிடத்தில் சான்றோர், பொறுமையும், அருளும், சிரிப்பும், உவப்பும் செய்நன்றியும் காட்டவேண்டும்.

பொறுமையாவது:— பிறர் செய்த குற்றத்திற்குத் தாம் ஒரு பதில்தீங்கு செய்யவாவது, மனதிலே வருந்தியிருக்கவாவது கூடாது.

அருளாவது:—நாம் பொறுத்திருந்தாலும், இவர்கள் இப்படியே பிறருக்குத் தீங்கு செய்து அவர்கள்

கோபத்திற்கு ஆளாகித் தண்டிக்கப்பெறுவார்களே! மறு உலகத்தில் கடவுளின் கோபத்திற் காளாகித் தகுந்த தண்டனைக்குள்ளாவார்களே, என்று இரங்க வேண்டும்.

சிரிப்பாவது-நம்முடைய பரலோககதிக்கு இவர்களாலொரு கெடுதலும் செய்யமுடியாது. இஹலோக விரோதங்களை ஏதாவது செய்யக்கூடும். அவற்றைச் செய்தால் அதை ஒரு கேடாக நினைத்துத் தங்களைப் போல் நாமும் வருந்துவோம் என்று நினைத்திருக்கிறார்களே! இப்படியும் ஒரு மூடபுத்தி யிருக்குமோ! என்று சிரிக்கவேண்டும்.

உவப்பாவது-இழிந்தோர் செய்யும் தீமைகளுக்கு இலக்கான உடலையும் உடைமையையும் (த்ருஷ்டபதார்த்தங்களையும்) விரோதிகளாகக் கருதுகின்றவர்களாகையால், விரோதிகளுக்குக் கேடு நேர்ந்தபொழுதும், தனக்குவிரோதங்களானவற்றைப் போக்கும் பொழுதும் மகிழ்வதுபோல மகிழவேண்டும்.

செய்நன்றியாவது—நம்முடைய ஊழ்வினைப் பயத்தால் வந்தனவற்றை நாம் மறந்திருக்கின்றபொழுது நமக்கு ஞாபகமூட்டி இவர் செய்யும் நன்றி நன்று என்று செய்நன்றி பாராட்டவேண்டும்.

மேற்கூறிய காரணங்களால் சான்றோர் 'இன்னா செய்தார்க்கே' இனியசெய்யக் கடப்பாடுடையவர். அவர்களுக்கும் இனியவே செய்யாவிட்டால் சால்பு என்னும் குணம் முற்றாப்பெறாது, என்றகொள்ளுமாறு 'உம்மை' உயர்வுசிறப்புப் பொருளில் வந்தது. இது கற்றோர் சிந்தனைக்குரியது.

---

# செந்தமிழ்ப் பிராட்டி வருகைப்பத்து

வண்டார் வெண்டா மரையன்றி
மாசு கலவா மாமாயை
மடுவிற் பூத்த வோங்கார
வட்டக் கமல மலரகத்தும்
கண்டார் உளத்தும் பாவாணர்
கவியி னகத்தும் தென்பொதியக்
கடவுட் சிலம்பின் சந்தனப்பூங்
கடியார் வண்ணப் பொழிலகத்தும்
பண்டேர் ஞானப் பசுங்குழவி
பாடி யிட்ட வேடகத்தும்
பரவு மடியார் நாவகத்தும்
பயிலும் பாதப் பெருமாட்டி
தண்டாப் பெருமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 1.

போற்றும் முப்பா லமுதருளும்
பொய்யா மொழியைப் பொற்சிலம்பு
புனைந்த சேரல் இளங்கோவைப்
புகழ்சேர் கம்ப னெனுங்கவியைக்
கூற்ற மிகுமே கலைதொடுத்த
கூல வணிகன் சாத்தனைக்
கோது குலவா முச்சங்கப்
புலவர் குழுவை யடிமைநெறி
தேற்றுந் தெய்வக் கவிமொழிந்த
சேக்கி ழாரைக் கச்சிவரு
தெய்வ முனியைச் சிவஞான
தேவன் தன்னை யுலகிவருள்
சாற்றும் பெருமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 2.

நீலக் கடுவை யமுதாக்கி
நெருப்பிற் குளித்து வைகைநதி
நீர்மே னடந்து கற்றுணையாய்
நெடுநீர்ப் புணரிக் கடனீந்திப்
பாலைப் புரையும் பிறைச்சடிலப்
பரமன் பாத மலர்வருந்தப்
பலகாற் றாது நடப்பித்துப்
பாவை யெலும்பு பெண்ணாக்கி
மேலைச் சுருதிப் பூட்டறுத்து
வெப்புக் கொடுநோய் குளிர்வித்து
வேழம் பணிவித் துடற்சூலை
விடுவித் தனந்தம் விளையாடல்
சாலப் புரியும் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 3.

கலைசேர் கடலிற் குளிர்மதியே
கடவுண் மணியே கற்பகமே
கனக நிதியே நாற்பாலும்
கறக்குங் காம தேனுவே
நிலைசேர் பொருளே எழுபிறப்பும்
நீங்கா துடனாய் நின்றுதவி
நேயத் துணையே யாருயிரே
நினைவே நினைவின் முழுநிறைவே
மலைசேர் தெய்வ மணிவிளக்கே
மலையத் தலையிற் குறுமுனிவன்
மடியிற் கிடத்தித் தாலாட்டி
மகிழ்வின் வளர்த்த மலர்க்கொடியே
தலைசேர் கற்பின் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 4.

தேனே பாகே நறும்பாலின்
திரளே கரும்பின் செழுஞ்சாறே
தெவிட்டா வமுதே யெனச்சுவைக்கும்
தெய்வத் தமிழின் தீங்குதலை
மானே மயிலே மடப்பிடியே
மாடப் புறவே மாங்குயிலே
வன்னக் கிளியே பொன்னனமே
மலர்மேற் பாவாய் மணிப்பூவாய்
ஆனே றுடையா னிருசெவிகட்
கன்பே முருக னகநிறையும்
ஆசைப் பெருக்கே தவப்பயனே
அறிவே தூண்டா மணிவிளக்கே
தானே தனைநேர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 5.



வானப் புலவர் மந்தரமால்
வரையைத் தமரத் திரைநிறுத்தி
மணிப்பொற் சூட்டுப் பொறித்துத்தி
யரவு வடத்து வலித்தநாள்
ஊனத் துடனே யெழுந்தவமு
துண்டா லினிக்கு முதுநாண
ஓதக் கலைத்தீந் தமிழ்க்கடலிவ்
வுலகப் புலவர் நனிகடையக்
காணக் கேட்க நெஞ்சகத்துக்
கருதக் கதிக்கும் பிறப்பேழும்
கலந்து சுவையும் பயனுமருள்
கடவு ளமுதா யெழுந்தவளே
தானத் துயர்ந்த தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 6.

கண்ணே கண்ணுட் கருமணியே
மணியுட் கதிரே கதிரொளியே
காணு மறிவே நல்லறிவில்
கலந்து விளங்குங் காட்சியே
எண்ணே யெழுத்தே ஏழிசையி
னின்பே யின்பி லெழுபயனே
ஏழைக் கிரங்கும் பெருங்கருணை
பெம்பி ராட்டி யென்றடியேம்
உண்ணே யத்தோ டனைக்கூவி
போல மிட்டு நின்றழைத்தால்
உளுற்றும் பிழைகள் பொறுத்துவரா
துங்கே யிருக்க வழக்குண்டோ
தண்ணேர் தலைமைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 7.

என்னைப் புரக்கும் மன்னரிலை
இயற்சீர் பரவும் புலவரிலை
இனிமை விழையும் மக்களிலை
ஈவோ ரில்லை யென்றிரங்கி
வன்னக் கருணை வடிவழகி
வாரா திருக்க விதியில்லை
மனதின் படியே வினைபுரியும்
மைந்தர் பலரு மிருக்கின்றார்
முன்னைப் பொருட்கு முதற்பொருளே
மூவா விளமை மொழியணங்கே
முந்நீர் வளைத்த வியனுலகம்
முழுது மாண்ட பெருமாட்டி
தன்னைத் தனிநேர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 8.

அப்பார் சடையா ராரமே
யருண்மா ணிக்கக் கோவையே
ஆசை பெருக்கும் வாசகமே
அம்மை யுமையாள் கண்மணியே
முப்பா லுலகு காவல்புரி
மூவா முருந்தன் வாய்மொழியே
முருகப் பெருமான் திருப்புகழே
மூத்த நயினார் மணித்தொடையே
எப்பா வலர்க்கும் முப்பாலே
யிருமர் ஞான சூத்திரமே
ஏழை யெனையும் பொருட்படுத்தி
யெடுத்தாட் கொண்ட பெருமாட்டி
தப்பா வாய்மைத் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 9.

தேரா தயலார் பழித்தாரோ
செல்வப் புதல்வர் மறந்தாரோ
திருவார் கலன்கள் மறைந்தனவோ
தீயும் நீரு முண்டனவோ
வாராக் காலம் வந்தனவோ
மன்னர் ஆட்சி யிழந்தனரோ
வள்ளன் மார்கள் குறைந்தனரோ
வாய்மைப் புலவர் போயினரோ
ஆரா வமுதே யருட்கடலே
அன்பின் பெருக்கே அகச்சுடரே
அன்னாய் வருக வெனவழைத்தால்
அணையா திருக்க விதியுண்டோ
தாரார் வேந்தர் தமிழகத்துத்
தாயே வருக வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 10.

அன்னே வருக மெய்ந்நாவி
னமுதே வருக வாருயிர்கட்
கறிவே வருக அறிவிலெழு
மன்பே வருக அன்புதரும்
பொன்னே வருக புந்திமலர்
பூவே வருக பூவிலமர்
பொறியே வருக பொறிகடந்த
பொற்பே வருக கருணைமழை
மின்னே வருக நாதவிந்து
வெளியே வருக வெளியிலொளிர்
விளக்கே வருக மெய்ந்நூலின்
வித்தே வருக வியனுலகில்
தன்னே ரில்லாத் தமிழகத்துத்
தாயே வருவ வருகவே
சங்கப் புலமைத் தமிழ்க்கூடற்
றலைவீ வருக வருகவே. 11.

199203

காலரா மருந்து
IDL வின்க்யூர்
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கெர்ப்பாசய டானிக். ரூ.2-0-0
சூதக டானிக். ரூ.1-8-0
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை. 0-4-0
கோரோஜனை .. 0-6-0
பாலசஞ்சீவினி .. 0-4-0
பாலஸுதா டானிக் ரூ 1
40 நாட்கள் உபயோகப் பாக்கெட் அணா ஒன்று
IDL ச்யாவனப்ராசா IDL பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரண பாக்கெட் IDL டீ.மெடிகேடட் டப்பி
ஜவரேக்
IDL ச்யாவனப்ராச சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்.

உண்மை கண்டுபிடிக்கும் யந்திரம்:—அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நார்த்வெஸ்ட் என்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அதில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு ரசாயனச் சாலையுள்ளது. அதைச் சேர்ந்த வியாஞர்டு கீலர் என்பவர் உண்மை கண்டுபிடிக்கும் யந்திரம் ஒன்றை உற்பத்திசெய்துள்ளார். அமெரிக்க நீதிஸ்தலங்களில் இதன் உபயோகம் சீக்கிரத்தில் பரவக்கூடும். இயந்திரத்தின் உபயோகம் விஸ்கான்சன் நகர நீதிஸ்தலத்தில் ஜஸ்டிஸ் வான்பெல்ட் என்பவர் முன்பாகப் பரீக்ஷிக்கப்பட்டது.

* * *

அமேரிக்காவில் தற்கொலை:—அமெரிக்கா ஐக்கிய நாட்டில் வறுமையாலும் வேறு பல காரணங்களாலும் சென்ற ஆண்டில் சுமார் இருபதினுயிரம் பேர்கள் தற்கொலை செய்துகொண்டார்களாம். இதனுல் தற்கொலையைத் தடுப்பதற்காகத் தற்கொலைவிலக்குச் சங்கம் ஒன்று அங்கு ஏற்பட்டிருக்கின்றது. எச். எம். வாரன் என்பவர் இதனை ஏற்படுத்தியிருக்கிருர். இவர் சென்ற இருபத்தைந்தாண்டுகளாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேலைசெய்து வருகின்ருர். தற்கொலை செய்துகொள்ள விரும்பிய சுமார் இருபத்தையாயிரம் பேர்களை இவர்காப்பாற்றியிருக்கிருர்.

இண்டோ - கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயாவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனுபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்–ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதருஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*
Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— சேம்புதாஸ் தெரு, சேன்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)